நம் நாடு மலர் 2 அணு ★ இலங்கையில் 20 சதம் ★ PHONE: 5[illegible]

நேரம் எங்கே இருக்கிறது?

நம்மைப் பற்றிப் பலர் தவருக நினைக்கிருர்களா? நினைத்துக்கொண்டு போகட்டும். அதையெல்லாம் திருத்திக் கொண்டிருக்க நமக்கேது நேரம்? அதற்கெல்லாம் வினைக்கும் அளவுக்கு, மிக நீண்ட வாழ்நாளா நமக்கிருக்கிறது?

—ஜார்ஜ் எலியட்

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

குருட்டு நம்பிக்கையின்கீழ் இரக்கமற்ற கட்டுப்பாடு

குருட்டு நம்பிக்கையின் காலடியில் இரக்கமற்ற சமூகக் கட்டுப்பாடுகளின் கீழ், பெண்மை நசுக்கப்படுகிறது. மனித இனத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் வாழ்வதற்கு இன்றியமையாத அவளுடைய உரிமைகள்கூடப் பொடிப்பொடியாகின்றன.

—காண்டேகர்

மலர் 4} சென்னை: ஆனி 2உ வெள்ளி (15—6—56) ★ ★ வெளியீடு: ஆனி 3உ சனி (16—6—56) [இதழ் 1

மக்களாட்சி மலருமா?

கி. மனோகரன்

சி. டி. பர்ன்ஸ், தான் தீட்டிய 'ஜனநாயகம்' எனும் புத்தகத்தில், 'மக்களாட்சிமலர,ஒரு சில பண்பாடுகள் தவிர்க்கமுடியாத தேவை' என்றார்; 'தேவையான சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும்' என்றார். மக்களாட்சி முறைக்குத் தன்னை ஒப்படைத்துவிட்ட அரசு, பேணிவளர்த்துத் தீரவேண்டிய முறைகளையும் கூறினர்; அவைகளின் சுருக்கத்தை, வாசகர்களின் கவனத்திற்குக் காணிக்கையாக்குகிறேன்.

மக்களாட்சி சிறந்து வளர—வளர்ந்து தழைக்க விரும்பும் அரசு—

(1) பொதுமக்கள் அபிப்பிராயத்தை 'மிதித்து' நடக்கக்கூடாது; 'மதித்து' நடக்க வேண்டும்

(2) ஆட்சிக் குழுத் தலைவர் மகத்தான மேதை—அறிவாற்றலின் சிம்மமாக இருந்தாலும், முழு அதிகாரத்தையும் அவர் கையில் ஒப்புவித்தல் கூடாது. நல்ல பண்பாட்டின் காவலாளியும்கூட, அதிகார போதையால் சில தவறி விட்ட சோகச் சம்பவங்களின் தொடர் கதைகளை, நாடு படித்துச் சோர்ந்து, சுருண்டு விட்டது—ஏற்கனவே! ஆக்டன் பிரபு குறிப்பிட்ட வாசகத்தை இங்கே கினைவுறுத்திக் கொள்ளல் நன்று—(Absolute Power Corrupts absolutely.)

3. ஆட்சிபீடம் ஏறியோர், மக்கள்தம் பிரதிநிதிகள்; அவர்கள் மனிதர்கள். தவறிழைப்பது, மனித இயற்கை. 'தவறே செய்யக்கூடாது' என்ற சூளுரை, வரவேற்பதற்குரியது 'தவறே நிகழாது' என்ற தீர்மானமான நம்பிக்கை, அடிப்படையில்லாதது. ஆகையினாலே, ஆட்சிக்குழு, மனித இயற்கையின் ஒரு சில விசேட—குறிப்பிட்ட காரணங்களாலே தவறிழைக்கலாம். நியாயமானதென்றே அவர்கள் நம்பும்—ஆனால், முற்றிலும் தவறான—மக்களைப் பாதிக்கும் காரியங்களிலிருந்து தப்புவதற்குரிய வழி, 'சுட்டிக்காட்டுதல்' மூலமாகும். அந்தப் பொறுப்பை, ஜனநாயக நாடுகளிலே, எதிர்க்கட்சிகள் பெற்றிருக்கின்றன. எதிர்க்கட்சிகள் ஜனநாயக நாடுகளில், பாதை தவறிச் செல்லும் ஆட்சியினருக்கு 'அபாய அறிவிப்பா'கும். 'பலம் பொருந்திய எதிர்க்கட்சித் தலைவர்களின் கண்டன உரைகள்தான், ஆட்சிப் போக்கை மாற்றி, எதிர்பார்க்கும் விளைவுகளை உருவாக்க உதவுமே தவிர, ஆட்சியினரை அண்டி, அவர்களுக்குப் புகழ்மாலை பாடி வாழுவோரின் சந்தர்ப்ப வார்த்தைகள் அல்ல,' என்றார்-எச். ஜே லாஸ்கி, தான் எழுதிய 'Liberty in the Modern State' என்னும் நூலில்!

4. கொள்கைகளை விவாதித்து, எதிர்க் கட்சியினரின் உரைகளுக்கு—வேண்டுகோள்களுக்கு மதிப்பளித்து, ஒப்புக்கொள்வனவற்றை ஒப்புக்கொண்டு, கொள்ள இயலாதவைகளை காரண காரியம் காட்டித்

(2-ம் பக்கம் பார்க்க)

முன்னேறு! முன்னேறு!!

முன்னேறு! முன்னேறு!! மேலும் மேலும் முன்னேறு!!! மற்றவர்கள், நீ முன்னேறுவதைக் கவனிக்கிருர்களா என்பதைக் காண்பதற்காக, நீ திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்காதே! முன்னேறுவதிலேயே கவனமாயிரு!

—மார்க்க அரேலியர்

எதிர்க்கட்சி

எஸ். எஸ். தென்னரசு

பெருமைக்குரிய ஆட்சி . . நடைபெறுகின்ற இடங்களிலேகூட, எதிர்க்கட்சிகள் இயங்கிவருகின்றன—நாம் படிக்கிறோம், வரலாறுகளில்!

அந்த எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பினாலும், கண்ணியமிகுந்த நடவடிக்கைகளாலும்தான் ஆளும் கட்சிக்கு, 'நல்லாட்சி நடத்துவோர்' என்ற நற்பெயர் கிடைக்கிறது என்று, சிங்காதனத்திலே இருப்போர் நினைக்கிருர்கள்—கடல் கடந்துள்ள குடியரசு நாடுகள் சிலவற்றில்!

எதிர்க்கட்சிகளால், எப்படி ஆளும் கட்சிக்குப் பெருமை கிட்டும்? நல்ல எதிர்க்கட்சிதான்—கற்றறிந்தோரைக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிதான் நாட்டு மக்களின் தேவைகளை, நாடாளும் கட்சிக்குப் புரியும்படி சொல்லுகிறது. அப்போது, எந்த வகையிலும், எந்தக் காரணத்தையும் சொல்லித் தப்ப முடியாத ஆளும் கட்சி, நிலைத்தைக் கல்லாக்கிக்கொண்டாவது மக்களுக்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்து முடிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. அதன் விளைவு, சரியாகவோ தவருகவோ, அதிகாரம் பெற்றிருக்கும் கட்சிக்குப் பாராட்டுக் கிடைக்கிறது. அந்தப் பாராட்டும், புகழ்மாலையும் யாரால் கிடைக்கின்றன? அதிகார வர்க்கத்திலே அங்கம் வகிக்கும் அறிஞர் பெருமக்கள் (இருந்தால்) ஒப்புக்கொள்வார்கள்—'இத்தனை பெருமையும் எதிர்க்கட்சியால் வந்தது'—என்று! என்றென்றைக்கும் ஒத்துவராத—ஒத்துவர முடியாத முரண்பாடுகள் இருந்தாலும் எதிர்க்கட்சிகள் கௌரவிக்கப்படுகின்றன. ஆனால், இந்தியத் துணைக் கண்டத்தில் இயங்கிவரும் எதிர்க்

(11-ம் பக்கம் பார்க்க)

'பாதை அமைப்பவர்கள்!'

மு. சண்முகம்

''எங்கே போகிறோமோ யாம் அறியோம்; எவ்வளவுதூரம் போக வேண்டும் என்பதும் தெரியாது; ஆனால் எங்கள் வழியே தான் நடக்கிறோம் என்பதில் மட்டும் தெளிவாக இருக்கிறோம். ஆற்றல் மிகப் படைத்த மேற்பார்வையாளர்களின் கீழ்தான் அணி வகுத்து நடக்கிறோம்.........''

'நாங்கள் எடுத்துக்கொள்ளும் நியாயமான முயற்சி அத்தனைக்கும் தடைக்கல்லாக இருக்க யாரையும் அனுமதிப்பதாக நோக்கமில்லை. இப்படிச் சொல்லுவதால், யாரையும் பயமுறுத்துகிறோம் என்பதல்ல—எச்சரிக்கிறோம்''

''ஆய்ந்தவிந்தடங்கிய அறிவாளிகள் அனுவசியமாக மூக்கைக் கூட சீந்தமாட்டார்கள்.''

மார்க்சிம் கார்க்கி என்ற எழுத்துலகச் சிற்பி, அறிஞர்கள்தம் செயலாற்றும் சக்தியை, எந்த கோணத்தில் நின்று எடைபோட்டு இப்படிச் சொன்னான் என்பது இப்போது தேவையில்லை; ஆனால், சொன்னவன், அப்பழுக்குச் சொல்லமுடியாத ஓர் அறிஞன்—இதுபோதும் நமக்கு!

இவனுடைய பேனாவிலிருந்து ஒரு துளி மை செலவாகிறது என்றால், அதனால் இலக்கியக் கழனி எவ்வளவு 'எரு' கொட்டப்பட்டதாகிறது என்பதோ—புரட்சிக் கனவு காணும் வாலிபர் இதயங்களுக்கு எத்தகைய 'தீனி' கிடைக்கிறதென்றோ கணக்குப்போட்டுப் பார்த்துக் கொண்டிருப்பதைவிட, ரஷ்யப் புரட்சிக்கு எத்தனை 'வெடிகுண்டு'களை—வீரப் புதல்வரை—விவேகப் போக்கினரை வேகவேகமாக இழுத்து வந்திருக்கிறதென்ற புள்ளி விவரம்தான் பேசப் பேசத் தெவிட்டாத தேனூறும் சேதி!

பார்க்கப்போனால், அவன் எழுத்துக்கள் அப்படியொன்றும் தீக்கொழுந்தை வாரித் தெளிக்கும் ஆவேச எழுத்துக்களல்ல! படிப்பவரின் இரத்தத்தைக் கொதித்தெழச் செய்யும் வாக்கியக் கோர்வைகள் கூடவல்ல! ஆனால், யாருடைய நரம்பையும் முறுக்கேற்றும்; எவருடைய இதயத்தையும் சற்று விசாலமாக்கும்!

'இப்படிச் செய்யுங்கள்' என்று யாருக்கும் வேண்டுகோள் விட்டதாக அவன் எழுத்துக்களில் காண முடியாது; ஆனால்......

'இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று வரையறுத்துச் சொல்லும் போக்கு அவன் வாழ்நாள் முழுவதுமே நூலிழையென அவனைச் சுற்றிக் கிடந்தது. காரணம், வேண்டுதல் செய்து, வேலை வாங்க வேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை. ஏனென்றால், எத்தகைய

(12-ம் பக்கம் பார்க்க)

அண்ணு, நெடுஞ்செழியன் ஆகியோருடன் 'நம் நாடு' அலுவலகத்தில் பணிபுரியும் தோழர்கள்

—'நம் நாடு' மூன்றும் ஆண்டு விழாவின்போது எடுக்கப்பட்ட பட

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 15—6—'56 வெள்ளி

நான்காம் ஆண்டு

வெற்றிகரமாக மூன்றும் ஆண்டை முடித்துவிட்டு, முன்னினும் சிறப்பான வெற்றியைத் தேடி நான்காம் ஆண்டில் எடுத்தடி வைக்கிறது, 'நம் நாடு'.

'நம் நாடு' பிறந்த ஒரு திங்களுக்குள்ளாகவே, மும்முனைப் போராட்டத்தைக் கழகம் துவக்கியது. போர்க்களச் செய்திகளை நாட்டு மக்களுக்கு உடனுக்குடன் உணர்த்தும் நல்லதோர் கடமையைத், திறம்பட நிறைவேற்றி இருக்கிறது, 'நம் நாடு'.

அந்தத் திருப்பணி, 'நம் நாடு' இதழின் இன்றியமையாமையை, கழகத் தோழர்களுக்கு அறிவுறுத்துவதில் முழு வெற்றி பெற்றிருக்கிறது.

அன்று ஆட்சிப் பொறுப்பிலிருந்த ஆச்சாரியார், கழகக் காவலர்களை சிறைக்குள் தள்ளி மூடிவிட்டால், மும்முனைப் போராட்டத்தை முறியடித்துவிடவும், கழகத்தைச் சிதறடித்து விடவும் முடியும் எனக் கற்பனை செய்துகொண்டு கொடிய அடக்குமுறைகளை ஏவினர். அவர் எண்ணத்தைத் தோற்கடிப்பதிலும், அறப்போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி உரிய இலக்கை அடைவதிலும் 'நம் நாடு' கடமை உணர்ச்சியுடனும், கண்ணியப் போக்குடனும் செயல்பட்டு இருப்பது எண்ணி எண்ணி மகிழத் தக்கதாகும்.

ஆட்சியாளர்களின் ஆணவத்தைக் கருவறுப்பதிலும், மாற்றுக் கட்சியினரின் நச்சுநாவை ஒடுக்குவதிலும், 'நம் நாடு' சிறப்பான பணி புரிந்து வந்திருக்கிறது என்பது மிகையாகாது.

கழகக் கோட்பாடுகளை விளக்குவதிலும், விதண்டாவாதிகளின் பொய்ப் பிரசாரத்தை அம்பலப்படுத்துவதிலும், தேசிய ஏடுகளின் பித்தலாட்டங்களுக்குத் தக்க பதிலளிப்பதிலும் 'நம் நாடு' கழகத்தின் காவலனகக் கடனாற்றி இருக்கிறது.

'நம் நாடு'—கழக வளர்ச்சியை பிரதிபலித்துக் காட்டும் நிலையை எய்துவதே சிறப்பு.

கழக உறுப்பினர்களின் தலையாய கடமை அதுவேயாகும்.

கழகத்தவர் ஒவ்வொருவரும் 'நம் நாடு' இதழை பணங் கொடுத்து வாங்கிப் படிப்பது எனச் சூளுரைத்துக் கொள்ள வேண்டும்.

'நம் நாடு' இதழை உடைத்தாயிராத கிளைக் கழகமே இயங்குதல் கூடாது என்ற முடிவிற்கு கழகத்தவர் வந்தாக வேண்டும் என்பது என் பெரும் விழைவு.

'நம் நாடு' இதழின் ஆக்கம் கழகத்தின் வளர்ச்சிக்கு பெரும் பலமாகும்.

'நம் நாடு' தனி ஒருவரின் உடைமையன்று.

கழக உறுப்பினர் அனைவரின் பொதுச்சொத்து. கழகத்தவரின் பேராதரவு தேவை—மேலும் மேலும் தேவை.

சென்ற மூன்று ஆண்டு நடைமுறை, 'நம் நாடு' இதழுக்கு மேலும் ஆதரவு பெருகும் என்ற நம்பிக்கையை அளிப்பதாக இல்லை எனக் கொள்வது தவறுடையது.

கழகத் தோழர்களின் சிறுமுயற்சி போதும், மேலும் ஆதரவு பெருகுவதற்கு. அந்த ஆதரவின் அளவைப் பொருத்திருக்கிறது, 'நம் நாடு' பெரிய உருவம் பெறுவது.

கழகத்தின் நண்பர் — வழிகாட்டி — பேராசிரியர் என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள அண்ணாவின் ஆணைக்கிணங்க, எனது கடமையைச் சென்ற மூன்றாண்டுக் காலமாக நடுநிலை பிறழாது நிறைவேற்றி வந்திருக்கிறேன் என்பதில் நான் பெருமகிழ்வு அடைகிறேன்.

இனியும், அத்தகு நேர்மையிலிருந்து வழி விலகிச் செல்லாது, அந்தக் கடமையைச் செயலாற்றி வருவேன்.

'நம் நாடு' வளர்ச்சியில் இதுவரை ஒத்துழைப்பு அளித்து வந்த அனைவருக்கும், பொறுப்பாசிரியர் என்ற உரிமையில் உளம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இனியும்—உங்கள் ஒத்துழைப்பு என்றென்றும் தேவை தேவை என முக்காலும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

வணக்கம் அன்பன்,

காஞ்சி · கல்யாணசுந்தரன்

பொறுப்பாசிரியர்.

'நம் நாடும்' கழகத்தவர் கடமையும்!

"முதன் மந்திரி காமராசர் கழகத்தின் மீது நடத்துகிற தாக்குதலுக்கு பதில் கூறும் வழி என்ன? நாங்கள், மேடைகளில் பதில்தந்து விடுகிறோம். நீங்கள் பதில் தருவது எப்படி? கழகத் தோழர்கள் அனைவரும் தங்கள் கையில் 'நம் நாடு' இதழ் வைத்திருப்பதுதான் காமராசருக்கு நாம் தரும் சிறந்த பதிலாக இருக்கமுடியும். அப்போதுதான், 'இவ்வளவு வளர்ச்சியும் செல்வாக்கும் பெற்ற இதழை நடத்துகிற கழகத்தையா காமராசர் அலட்சியமாகப் பேசுகிறார்' என்று நாட்டவர் கேட்பர்

"பலன் தருகிறதோ இல்லையோ—சைவர்கள் விபூதி பட்டை அணிந்து கொள்கிறார்கள்; வைணவர்கள் பட்டை நாமம் தீட்டிக் கொள்கிறார்கள்; கிருத்துவர்கள் ஜெபமாலை வைத்துக் கொள்கிறார்கள் மதப்பற்றுடையவர்கள் கட்டுப்பாடாக இந்தக் காரியங்களைச் செய்வதைப்போல, கழகத் தோழர்களும்—கட்டுப்பாடாக ஒவ்வொருவரும் 'நம் நாடு' இதழ் வைத்துக் கொள்ள வேண்டும் மதப்பற்றுடையவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது வேறெதுவும் இல்லாவிடினும் இந்தக் கட்டுப்பாட்டு உணர்ச்சியைக் கற்றுக்கொள்ள வேண்டும் எனவே, கழகத் தோழர்கள் இதழ் வளர்ச்சிக்காக நன்கொடைகள் தருவதோடு, 'நம் நாடு' இதழைத் தவறாது வாங்கி இதழை வளர்ச்சியுறச் செய்வதற்கு வழிசெய்ய வேண்டும்; 'நம்நாடு' நமது போர்வாள்! போர்வாள் வைத்திருக்க வேண்டியது வீரர்களுடைய கடமை என்பதை உணர்த்த விரும்புகிறேன்"

—அண்ணா

'நம் நாடு' இதழ் துணை ஆசிரியர்



முகவை ஆர். எஸ். பாண்டியன்

"உலகில் கடவுள் இல்லை என்று நான் கூறவில்லை. கடவுள் பெயரால் புதிய கருத்துக்களை மக்களுக்கு நடித்து பேசிக்காட்டலாம். இதனால் சிறு மாற்றம்வைத்து அமைத்தாலும் அது குற்றமாகாது. பழைய கருத்து கடவுள் பெயராலும், கலையின் பெயராலும் திரும்பத் திரும்ப வருவது நாட்டு மக்களுக்குப் பயனை அளிக்காது"

—பெரியார் ஈ. வெ. ரா.

உழைப்பாளர்கள், தம் உள்ளத்திலே உண்டாகும் புண்ணைப் போக்கிக்கொள்ள மதவாதிகள் தயாரித்துக்கொடுத்த மாயப்பிரபஞ்சம் — மறுபிறவி — பூர்வ ஜென்மவினை போன்ற களிம்புகளைப் பூசிக்கொள்கிறார்கள்! இது சரியா?

—அண்ணா

பிறர் நம்மைப் பற்றி இல்லாததையும்—இருக்க முடியாததையும் சொல்லிச் சொல்லிப் பாராட்டுவது, அதை நாம் பொறுமையோடு உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பது— இது ஒரு கௌரவமா? இல்லை; காலத்திற்குக் கேடு!

—ஜான் மில்டன்

எட்டுத் திசையிலும் நாம்!

(கண்ணதாசன்)

எட்டுத் திசையிலும் நாம் வளர்ந்தோம்—நமை
எத்திப் பிழைப்பவர் சீறுகின்றார்—அண்ணன்
சுட்டு விரற்கடை தூக்கிவிட்டால்—அவர்
தூளுக்கும் தூளெனக் கூவிடடா!
பட்ட வடுக்களைக் காட்டிடடா!—அதிற்
பாடும் துணிவினைக் கூறிடடா!—இனித்
தட்டர்கள் பின்புறம் தாகக வந்தால்—அவர்
தோளெங்கள் தாளுக்கென் றோதிடடா!

நட்ட நடுநிசி வேளையிலே—அந்த
நாயகர் பெற்ற சுதந்திரமோ—பிறர்
தொட்டுக் கொடுத்த சுதந்திரந்தான்—அந்த
சூரர்கள் போரிட்டுப் பெற்றதில்லை!
கட்டிக் கழகத்தைக் காத்துவரும்—அண்ணன்
காளையர் தம்மை அழைத்துவிட்டால்—கையில்
கட்டி யிருக்கும் விலங்கினை நாம்—வளர்
காற்றிற் பறக்க உடைத்திடுவோம்!

வானில் பறப்பது நட்கொடிதான்—மொழி
வண்ண மடைந்ததும் நம்வழிதான்—அந்தப்
பூனைகளும் கொஞ்சம் புத்தியடைந்திடப்
போதனை செய்ததும் நம்மவர்தான்!
ஆனை நிகர்த்தநம் சேனை பலம்—தனை
ஆறறி வுள்ளவர் ஒப்புகின்றார்!—உடல்
கூனிய காங்கிரஸ் கோமகனார் மட்டும்
குக்கல் மதியினைக் காட்டுகின்றார்!

கான மகுடிமுன் ஆடுகையில்—கரு
நாகத்திலும் கலை கண்டிடுவோர்—அது
தானும் கொதித்துக் கடிக்கவந்தால்—அதன்
சங்கடம் தீர்த்திடும் செய்கையைப் போல்
"போனது போகட்டும் வாருமையா!"—எனப்
புத்திமதி சொல்லிக் கூப்பிடுவோம்!—"இல்லை!
ஆனது ஆகட்டும் பார்ப்ப"மென்றால்—அவர்
ஆடி விழுந்திடப் போர்தொடுப்போம்!

தாயைப் பிரிந்தவர் சிங்களத்தில்—அண்ணன்
தன்னைப் பிரிந்தவர் புட்பகத்தில்—இளஞ்
சேயை மனைவியை வீட்டைப் பிரிந்தவர்
தேம்பி அழுவது சாவகத்தில்!
தூய இவர்கள் பிறந்ததெல்லாம்—வெறும்
சோற்றுக் கடா! வெறும் சோற்றுக்கடா!—தெரு
நாயி லிழிந்திவர் வாடுகையில்—வட
நாட்டவர் எங்கணும் வாழுகிறார்!

அன்னைத் திராவிடப் பொன்னாடே!—உன்
ஆணை! தமிழ்மொழி மீதாணை!
மண்ணைப் பிரிந்தவர் மீண்டுமிங்கே—வரும்
மார்க்கத்தைக் காண முயன்றிடுவோம்!
அன்னையுன் நாட்டைப் பிரித்திடுவோம்—இல்லை
ஆவி யழிந்திடக் கண்டிடுவாய்!
கண்ணையும் காலையும் வெட்டியபின் இந்தக்
காய மிருந்தென்ன போயுமென்ன!

☆

கொடிகட்டி ஆள்வோரின் கோட்டைக்குள்ளே குழம்பிக் கிடக்கும் 'பெரிய மனித'ராம் நேருவின் மீது கேள்விக்கணை தொடுத்து, அவரின் முன்னுக்குப் பின் முரணனச்செயலை ஆதாரங்களுடன் அலசிக் காட்டி, கொள்கை உறுதியற்ற கம்யூனிஸ்டு கட்சியின் உண்மூடிப்போக்கை கலகலக்க வைத்து 'இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்களை' கம்பீரத்தோற்றமுடன், கன்னல் தமிழிலே அழகுபட விளக்கி, அறைகூவலும் விடுகிறார் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள்.

மக்களாட்சி மலருமா?

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தன்னுதல் மக்களாட்சியின் உயிர் அம்சம் அந்த உணர்ச்சி (Spirit of Discussion and Compromise) வளர்க்கப்படாவிட்டால, ஜனநாயகம் துளிர்விடாது

5. ஜனநாயகக் கோட்பாடு கொண்டிருக்கும் அடிப்படையிலே ஒன்று, சுதந்திரம்; அந்தச் சுதந்திரத்தின் இதயம் சம உரிமையாகும். சம உரிமை கோரிய நாடுகள், இரத்த வெள்ளத்திலே நீச்சல் கற்றிருக்கின்றன. புரட்சி வரலாறுகள் நமக்குத் தரும் படிப்பினைகள் பல. அந்தப் படிப்பினைகளிலே ஒன்று—'மனித உரிமை மகத்தானது. அந்த உரிமைகளைப் பறிப்போர், மகத்தான மக்கள் புரட்சிக்கு விதை தூவுகிறார்கள்' என்று பொருளாகும். அந்தப் புரட்சியிலே ஆணவம் அடியோடு சாய்ந்திருக்கிறது. ஆகவே 'ஜனநாயகம்' என்ற அரசியல் கோட்பாட்டைக் கடிமணம் செய்தோர், மனித சமூகங்களின் விலை மதிப்பற்ற சம உரிமையை கட்டிக்காத்தாக வேண்டும்

நமது ஏடு!

அரங்கண்ணல்

"சென்னை மவுண்ட் ரோடிலிருக்கும் 'இந்து' பத்திரிகாலயத்தைக் காண்கிறபோதெல்லாம், 'ஏ, அப்பா!' என்றே நான் மலைப்பதுண்டு. 'எவ்வளவு சக்தி மிக்கவர்களை எதிர்த்து நாம் போராடுகிறோம்?'—என்கிற எண்ணம் எனக்கு வரும். அடுத்த வினாடியே, எனக்குள்ளாகவே நான் எண்ணிக்கொள்வேன்—இவ்வளவு பெரியவர்களுக்கு மத்தியிலும் நாம் வளர்ந்து கொண்டுதானே இருக்கிறோம்; எழிலும், கலரும் போட்டுத் தர இயலாது, நமது ஏட்டில்; என்றாலும், அவர்கள் வியப்படைகிற அளவுக்கு நாம் வளர்ந்துதானே இருக்கிறோம். மலை பெரிதானாலும், அதனைப் பிளப்பது சிற்றுளிதானே!"

என்று, திருச்சி மாநில மாநாட்டில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டபோது, ஒருகணம் நான் சிந்தித்தேன். உண்மையில், 'இந்து' ஏட்டின் வனப்பையும், 'தினமணி' பெற்றிருக்கும் வசதியையும், வாரா வாரம் வெளிவரும் இதழ்களையும் பார்க்கிறபோது, 'இப்படியும், நாம் பத்திரிகைகள் நடத்துகிற காலம் எப்போது வரும்?' என்று பெருமூச்சு விடுகிறவர்களில் நானும் ஒருவன்.

'முஸ்லிம்' தினசரி ஏட்டில் நான் துணை ஆசிரியனாக உலவியபோது, 'அந்த இடத்து' அலுவலகங்களைக் காண்கிற வாய்ப்பு எனக்கு அடிக்கடி ஏற்பட்டதுண்டு. அந்த அலுவலகங்களையும், நமது ஏட்டாளர்களின் அலுவலகங்களையும் ஒப்பிட்டால், அண்ணா அவர்கள் சொன்னதுபோல—ஒரு கணம் திகைப்பும், மறுவினாடியே தெம்பும் ஏற்படத்தான் செய்யும்.

'தினமணி'யிலும், 'மித்திரனி'லும் ஏழெட்டுப் பேர் செய்ய வேண்டிய காரியத்தை நமது காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் செய்கிறார்!

மூன்று நான்கு பேர் திரட்டிடும் வேலையை பாண்டியன் முடித்து விடுகிறார்! இந்த ஆற்றலும், சக்தியும் நம்மிடம் இருக்கிற காரணத்தால்தான், நமக்குத் தெம்பும், ஆனந்தமும் உருவாக முடிகிறது.

ஒரு சமயம் என்னை, ஒரு தேசிய வார ஏட்டின் ஆசிரியர் சந்தித்தார். மிகப் பிரபலமானவர்தான்! 'ஓவியர்கள் இல்லாமல், 'கலர்' இயந்திரங்கள் இல்லாமல், ஆசிரியர் குழாம் வைத்துக் கொள்ளாமல், எப்படி உங்களால் பல்லாயிரக் கணக்கான பிரதிகளை விற்பனை செய்ய முடிகிறது? அதுவும் வெளியூரில் 'ஆபீஸ்' வைத்துக் கொண்டு?'—என்றார், ஆச்சரியத்துடன், 'திராவிட நாடு' வார ஏட்டைக் குறித்து! அப்படி அவர் கேட்டபோது, கொஞ்சம் பெருமையாகத்தானிருந்தது, எனக்கு! ஏனெனில், நண்பர், என்னென்ன நம்மிடம் இல்லையென்று சொன்னாரோ, அத்தனையும் ஒரு ஏட்டுக்குத் தேவையற்றது என்று பொருளல்ல! 'கலர்' இயந்திரமும், ஆசிரியர் குழாமும், அலுவலக வசதிகளும், தேவைதான்! ஆனால், அவைகளைப் பெறுகிற 'பணநாதன்' பாக்கியம் பெறாதவர்கள் நாம்! அதனால், இருப்பதைக் கொண்டே ஏடுகள் நடத்துகிறோம்! அப்படி நடத்தியும், அவர்கள் நடத்தும் பத்திரிகைகளைக் காட்டிலும் மக்கள் மன்றத்தில் அதிகம் விற்பனையாகின்றன! என்ன காரணம் இதற்கு? 'ஆர்ட்' அட்டை! மூவர்ணச் சித்திரங்கள்! மூலைக்கு மூலை துண்டு துணுக்குகள்! திரைப்படச் செய்திகள்! மாதர் பகுதி! குழந்தைகள் பக்கம்! இப்படி, யாராருக்கு எதெதில் சுவையிருக்குமோ அத்தனையையும் அவர்கள் கலந்து அளிப்பினும், அவர்தம் ஏடுகளைவிட நமது ஏடுகள் விற்பனையாகக் காரணம் என்ன?' நாம், ஒரு குறிக்கோளைக் கூறுகிறவர்கள் என்பதுதான்.

நாம் இதயத்தில் தாங்கியிருக்கும் இலட்சியத்தினை மக்கள் மன்றத்துக்கு விளக்குவதற்காக ஏடு நடத்துகிறோம். அதனால்தான், வசதிகள் அதிகமில்லாவிடினும், சுந்தரப் பவனி வர முடிகிறது நம்மால்!

இவ்விதம், நாமுடைய இலட்சிய விளக்கங்களைத் தர, முன்னைவிட இப்போது வார ஏடுகள் அதிகமுள்ளன. 'தேவைக்குமேலா?' என்று கேட்டால், 'ஒருக்காலும் இல்லை' என்பேன். ஏனெனில், நாட்டில் நமது கருத்துக்கள் செல்லவேண்டிய இடங்கள் ஏராளமுள்ளன! நமது இயக்கம் ஒரு விடுதலை இயக்கம் என்பதால் இதன் பக்கம் இழுத்து வரவேண்டிய பகுதியினர், ஏராளமாக இருக்கிறார்கள்! அவர்களை எல்லாம் விளக்கம் பெறச்செய்து, நமது பக்கம் கொண்டுவர நானாவிதமான வல்லுநர்களும் தேவை; ஏடுகளும் வேண்டும்.

நாம் 'அவர்களை'ப் போல தினசரிகளும், வார ஏடுகளும் நடத்துகிற நாட்கள் வரக்கூடும். ஆனால், அவர்களால் நம்மைப்போல ஒரு போதும் ஏடு நடத்தி வாழ முடியாது.

'பார்க்கர்' பேனா சாதிக்காததை நம்மிடமுள்ள 'ஓட்டை உடைசல் பேனாக்கள்' சாதிக்கின்றன, நாட்டில்! காரணம், மக்கள் மன்றம் படிப்பதும் பார்ப்பதும் பேனாவையல்ல; கருத்துக்களை! அத்தகையக் கருத்துக்களைக் கொண்டிருப்பதால்தான், நம்மால், உடைந்த எழுத்துக்களானாலும், உருத்தெரியாத அச்சுக்களானாலும், அவைகளைக் கொண்டு பெருமித பவனி வரமுடிகிறது, எழுத்துலகில்!

கையளவுள்ள ஏடுதான், 'நம் நாடு'; ஆனால், தினசரி, நாட்டுக்கும், நமது இலட்சியத்துக்கும் அது ஆற்றிவரும் தொண்டினை, அலட்சியப் புத்தியுள்ளோர், 'இது என்ன ஒரு பத்திரிகையா?' என்று கூற முடியுமே தவிர, கஷ்ட நஷ்டங்களை அறிந்தோரும், ஏட்டினை எதிரிகள் எங்ஙனம் பார்க்கின்றனர் என்பதை உணர்வோரும் கூறமாட்டார்கள். ஏனெனில், 'நம் நாடு' நமது ஏடு! கொள்கை விளக்க ஏடு! இதைவிட வேறென்ன பெருமை வேண்டும், அதற்கு?

'இப்படியொரு ஏடு நமக்கு வேண்டும்' என்று 'தவமிருந்த' நாட்கள் பல! 'கழகத்துக்காகவே ஒரு ஏடு வேண்டும்' என்று வலியுறுத்தியத் தோழர்கள் ஏராளம்! அவர்கள் அத்தனைபேரும், இராயபுரம் 'அறிவக'த்தில் இயங்கும் நமது 'நாட்டினை'க் காணும்போது பூரிப்பும், பெருமிதமும் அடையத்தான் செய்வர். ஏனெனில், 'நம் நாடு' தனியொருவரின் சொத்து அல்ல—பொதுச் சொத்து!

கூட்டுப் பொறுப்பால் இயங்குவதுதான், நமது ஏடும், கழகமும்! தனியொருவரின் தர்பாரில் இயங்குவது அல்ல!—இதனை அறியாதவர்களல்ல, நமது தோழர்கள்!

அதனால், ஒவ்வொரு கழகத்தினரும், குறைந்த பட்சம் ஒரு சந்தாவவது (ஆண்டுக்கு) சேர்த்து அனுப்ப வேண்டும் என்று, இந்தப் புது ஆண்டில் சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

நமது ஏட்டுடன் தொடர்பு கொள்வதை நீங்காக் கடமையாகக் கொள்ளவேண்டும். அதனை 'நம் நாட்டினரும்' விரும்பி வரவேற்பார்கள்.

நம்மையே நம்பியவர்கள் நாம்!
நம்மை நம்பியிருப்பது 'நம் நாடு'!!
அதனை வளர்ப்பதும், அழிப்பதும் நம்மிடம்தான் இருக்கிறது!!!

நம்மை நமக்கே தந்த தாய்க்குலம்—திருச்சி மாநாட்டில், வீரர்களோடு போட்டியிட்டுக்கொண்டு பெருமளவில் கலந்துகொண்ட காட்சி!

வாழ்க, நம் நாடு!

மு. கருணாநிதி

நமது கழகத்திற்கு ஏழு வயதாகிறது—'நம் நாடு' இதழுக்கு நாலு வயதாகிறது—நாம் கேட்கும் திராவிடமோ உலகில் மூத்தது—நாம் வளர்க்கும் தமிழோ நம்மையும் வளர்த்து, உலகில் நாகரீகத்தையும் வளர்த்த மொழிகள் குல முதல்வியெனும் உயர் தனிச் சிறப்புடையது! நமது விடுதலை எழுச்சியை வீழ்த்த நினைப்பவர்களோ வாலிக்கு இளையவர்கள்! இராவணனின் இளையோனுக்கும் இளையோர்!

புலியை வேட்டையாடி, வில்லேருழவர் கயல்விழி மாதரிடம் காதற்பரிசு பெறுவர்; புலி, வில், கயல் எனும் கொடி பறக்கும் தமிழகத்தை வாழ்த்துவர்; அந்தத் தமிழகமே இலக்கியத்தில் இல்லையெனும் இழிகுணப் பிறவிகளின் இடையிலேதான் 'தமிழெங்கள் உயிருக்கு நேர்' என முழங்கிப் போர் தொடுக்கப் புறப்படுகிறது, நமது படை! 'இளம் வயதுடையார்; ஆயினும், இரணியனின் நெஞ்சுடையார்' என இன உணர்வு பெற்றவர்கள் வாழ்த்தத்தான் செய்கின்றனர், நம்மை! மகிழ்கிறோம்; புகழ்ச்சியில் மயங்காது, போர்! போர்!! — எனவே கிளம்புகிறோம்!

"நீரின்வந்த நிமிர்பரிப் புரவியும்
காரின்வந்த கருங்கறி மூடையும்
வடமலைப்பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப்பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற்றுகிரும்
கங்கைவாரியும்—காவிரிப் பயனும்
ஈழத்துணவும்—காழகத்தாக்கமும்..."

தமிழகத்தின் இறக்குமதி ஏற்றுமதிப் பொருள்கள் இவையென பட்டினப்பாலை பகருகிறது—அது பாதத்தாங்கிகள் யாத்த நூல்களைவிட மூத்தது! அன்று வெளிநாட்டார் தந்த தங்க நாணயம் திராவிடத்தின் பூமிக்கடியிலே கிடைக்கிறது—இன்று, திராவிடம் அளிக்கின்ற வெள்ளி நாணயம் வடநாட்டில் வானை முட்டும் ஆலைகளாக உயருகிறது! இந்த அக்கிரமத்தின் ஆயுள் முடியாதா என்று ஆட்பெரும் படையுடையோர்—அண்ணாவின் துணையுடையோர்—அனலுமிழும் கண்களோடு கரம் உயர்த்துகிறோம்—களம் நோக்கி விழி செலுத்துகிறோம்!

நம் கழகத்திற்கோ ஏழு வயதாகிறது—'நம் நாடு' இதழுக்கு நாலு வயதாகிறது—நாம் எதிர்க்கும் பகையோ, அகில இந்தியப் புகழ் பெற்றது—

(10-ம் பக்கம் பார்க்க)

சுமை தாங்கி!

டி. கே. சீனிவாசன்

அது ஒரு விடிவெள்ளி; வெளுக்கும் வானத்தின் அறிவிப்பு! விஞ்ஞானத்தின் விளக்கத்துக்கு உட்படாத விநோதங்கள் அங்கே நடக்கக் கண்டோம். கதிரவன், பூமி, நிலா மூன்றும், ஏககாலத்தில் அங்கே ஒன்றுபட்டன—எதுவும் எதையும் மறைக்கவில்லை! அண்ணா—அவரைச் சுற்றிச் சுழலும் திராவிட முன்னேற்றக் கழகம்—பூமியைச் சுற்றவேண்டிய நிலை ஏற்பட்டதால் கதிரவனைச் சுற்றிச் சுழலக் கடமைப்பட்ட பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்! ஒரே கோட்டில் வந்தனர் இவர்கள் மூவரும்; இருள் ஏற்படவேயில்லை; ஒளிதான் அளவுக்கு மீறி நிறைந்தது!

அந்த நான்கு நாட்கள்! வேதனைச் சுமையை நெஞ்சிலிருந்து இறக்கிவிட்டு வெற்றிச்சுமையைச் சுமந்து சென்ற எண்ணற்றோர் இதயங்களும், எண்ணங்களும் ஒன்றுபட்டு உலவிய நான்கு நாட்கள்! இன்பத் திராவிடத்தின் எதிர்காலத்துக்கு எழுதப்பட்ட முன்னுரை!

'சுமை தாங்கி!' தோழர் நா. பாண்டுரங்கன் உருவாக்கி, நடிக நண்பர் எம். ஜி. இராமச்சந்திரனால் நடிக்கப்பட்ட நாடகம் மாநாட்டின் கடைசி நாளன்று நடந்தது. குழப்பமும், கூச்சலும் நாடகத்தைத் தொடர்ந்து பார்க்கமுடியாமல் தடுத்தன. எங்கோ ஒரு மூலையில் நண்பர்கள் சிலரோடு அமர்ந்து நாடகத்தைக் 'கேட்டுக் கொண்டிருந்தேன். 'சுமை தாங்கி' என்ற பாட்டு அந்த மாபெரும் திறந்தவெளியில் சுற்றிச் சுழலத் தொடங்கியது. நாடகம்—அதன் நினைவே மறைந்துபோனது; நடிகர்கள்—அவர்கள் என் கவனத்தை விட்டு மறைந்தனர். 'சுமை தாங்கி' என்ற அந்தச் சொல் மட்டும் சுருதி தவறாமல் ஒலித்தது. இதய ஒலியாக உள்ள இன்பத் திராவிடங்கூட ஒரு சுமைதாங்கியாக என்னெனிரே............

சென்றுபோன ஆண்டுகள் வடுக்கள் நிறைந்த வரலாற்று ஏடுகளை நீட்டின. ஏடுகளைப் புரட்டிப்படித்துவிட்டு, 'எங்கே அந்த மலர்த் தோட்டம்?'—என்று, பார்வை எட்டும் திசை வரை தேடித் துளாவினேன். வெறும் மண்திட்டுதான் தெரிகிறதே தவிர, மலர்க் காட்டைப் பார்க்க முடிவதே இல்லை! மண் திட்டாக மாறிய அந்த மலர்க்காடும், காலப் போக்கில் ஒரு மலக்காடாக ஆகிவிடுமோ என்ற அச்சம் நம்மைத் துளைக்கிறது.

'வீரர்கள்—வெற்றிக் கொடி நாட்டியவர்கள்—விவேக சிந்தாமணிகள் என்று ஏற்றிப் போற்றுகிறீர்களே, அந்தப் பரம்பரையில் வந்தவர்கள்தாம், இதோ, இங்கே காணுகிறீர்களே—இந்தப் பஞ்சைகள், பராரிகள், பாதந் தாங்கிகள்,' என்று சொல்லும் அளவுக்கு வளர்ந்திருக்கும் சூழ்நிலை, நம்மைச் சுற்றியிருந்து கசக்கிப் பிழிகிறது. 'அவனுக்குப் பிறந்தவனா இவன்?'—இந்தக் கேள்வியில் தொக்கி நிற்கும் அருவருப்பும், ஆபாசமும்........ 'அப்படிப்பட்டவர்கள் வழி வந்தவர்களா இவர்கள்?'—இப்படிக் கேட்கவேண்டும் என்றுயாருக்குத்தான்தோன்றவில்லை, இப்போது?

எப்படி ஏற்பட்டது இந்தச் சூழ்நிலை? இளமையும், வளமையும் கொட்டிக் கிடக்கும் சிவப்பு அணுக்கள் சீரழிக்கப்பட்டு, இளைப்பும், அலுப்பும் ஏற்படச் செய்யும் காசக் கிருமிகள் எப்படி நுழைந்தன? பக்கம் பக்கமாகப் புரண்டு செல்லும் வரலாற்றுப் புத்தகங்கள் நம் முன்னாலிருந்து கை கொட்டிச் சிரிக்கின்றன.

வள்ளுவன் வகுத்த ஒழுக்க வரம்புக்குள்ளே தம்மை உட்படுத்தி ஒன்றியிருந்த திராவிடம் சிதறக் காரணமாயிருந்தவர்கள்........தமிழ் நாட்டுப் பார்ப்பனரான இராமானுசர், மலையாளப் பார்ப்பனரான சங்கரர், கன்னட நாட்டுப் பார்ப்பனரான மத்வர், தெலுங்கு நாட்டுப் பார்ப்பனரான குமரினபட்டர்—இவர்கள்! நால்வருந்தான் நஞ்சைக் கதிர்களிடையே நச்சுப் பூச்சிகளை உலவ விட்டவர்கள்! வேதங்கள் கக்கிய விஷத்தைத் தென்னாட்டில் விதைத்து வளரச் செய்த வஞ்சகர்கள்! பிறந்த இடத்தில் செல்வாக்கற்று, அழிந்து போகும் நிலையை அடைந்த அந்தக் கருத்துக்கள் புகுந்த இடத்தில் பராமரிப்பும் பாதுகாப்பும் பெற்றன; ஆண்டவன் பயன்படுத்தப் பட்டார்; அதற்கும் வளையாதவர்களுக்கு முன்னால் நெளிந்து இழைந்தனர் அழகிகள்; பயமும் பாசமும் முற்றுகையிட்டவுடன் பணிந்தனா மன்னர்கள்; மனம் மாறிய மன்னர்கள் மக்களையும் மண்டியிடச் செய்தனர், அந்தப் பண்புகளுக்கு முன்னால்!

வேத சாஸ்திரங்கள், ஆகமங்கள், புராணங்கள், ஆண்டவன் அவதாரங்கள் ஒவ்வொன்றாகத் தொடர்ந்து உள்ளே புகுந்தன. அறிவும் ஆற்றலுமே உருவான தன்னுடைய பண்பாட்டைக் கைவிட்டது திராவிடம்; மாற்றார் கருத்துக்களுக்குச் 'சுமை தாங்கி'யானது. இன்று அதன் மேல் மண்டிக்கிடக்கும் போலிகளைத்தான் பார்க்கிறோம்!

அப்பரும், சுந்தரரும், சம்பந்தரும், கம்பனும் இரவல் கருத்துக்களைத் தமிழக வரலாற்றில் இடைச் செருகல்களாக்கிச் சென்றனர். அவை வளர்ந்தன—வலிவு பெற்றன—இன்றைக்கு நம்மிடையே வாழ்கின்றன. தாலி கட்டிய தளிர் உடல் மேனியாளைத் தவிக்கச் செய்துவிட்டு, மெருகு தீட்டி 'மேக்கப்' செய்துகொண்ட சருகோடு சல்லாபஞ் செய்யும் நிலைக்குத் தாழ்ந்திருக்கிறோம். ஏற்கனவே இருந்ததல்ல; எவராலோ நம்மேல் ஏற்றிச் சுமத்தப்பட்ட எண்ணங்கள், இலக்கியங்கள், கலைகள், பண்பாடுகள் இவைகளைத்தாம் நாம் தூக்கிச் சுமக்கிறோம்! சூதுக்குப் பலியான சுமைதாங்கிகள் பலரைப் பார்க்கிறோம்! ஏமாற்றப்பட்டோம் என்பதையே மறந்து, எத்தர்கள் செயலுக்கு வக்காலத்து வாங்கும் 'எடுபிடி'கள் எத்தனை எத்தனையோ பேர் நாட்டில் நடமாடுகின்றனர். சம்பந்தர் நம்முடைய சம்பத்து; சுந்தரர் எங்களுக்குச் சொந்தமானவர்; சிவன் எங்கள் ஐயன்; விநாயகர் எங்கள் இனத்துக்கே வேரானவர்; திருமால்தான் எங்கள் பெருமாள்—எங்கெங்கோ இருந்து ஒலிக்கின்றன இந்தக் குரல்கள்!

இவைகளைப் பயன்படுத்தித்தான், 'இந்தியா ஒன்று' என்று எக்காளமிடுகின்றனர், வட நாட்டுத் தலைவர்கள்! இராமனும் கிருஷ்ணனும், ஆகமங்களும் புராணங்களும், காளியும் கமலவாணியும் இமயத்திலே தொடங்கி குமரிவரை கொட்டமடிக்கின்றனவே! இதற்குத்தான் பெயர் 'கலாச்சார ஒற்றுமை' என்பது!

எல்லா மொழிச் சொற்களையும் இணைத்துப்பேசுகின்றனர். இங்கே வாழும் பட்டு நூல் காரர்கள்! அது ஒருமொழியாகவில்லை, இன்னமும்! பல வீட்டுப் பண்டங்களை வாங்கிச் சாப்பிட்டு வாந்தியெடுக்கிறான், பிச்சைக்காரன்; அதற்கு ஒரு உருவம் கொடுக்கமுடியாது எவராலும்!

ஆண்டவனை மயக்குவதுதான் நம் வேலை என்ற அடிப்படையில் உருவான வேதங்களும்—வேதங்கள் கற்பித்த சடங்குகளை ஒழித்துவிட்டு, அதன் கருத்துக்களைத் தத்துவங்களாக ஆக்கிய உபநிஷத்துக்களும்—இரண்டுமே தவறு! எத்தர்களின் தெகிடுதத்தம்!

'ஆண்டவன் பெரியவன் என்றால் அவனே நம்மெதிரில் தோன்றி நிரூபித்துக் காட்டட்டுமே' என்று கூறிய சார்வாகா தத்துவத்தை உருவாக்கியவர்களும், 'ஆண்டவனாக இருந்தாலும் மனிதனாகத்தான் நிர்வாண நிலையை அடைய முடியும்' என்று போதித்த சைன மதமும், 'ஆத்மா என்பது மனிதனுடைய சுயநலத்தை வளர்க்கப் பயன்படும் வாதம்; அதை ஏற்றுக்கொள்ள முடியாது,' என்று கூறிய பௌத்தமும்—எப்படி ஒன்றாக ஆகின? மயானத்திலே மண்டை ஓடுகளிடையே வெறிபிடித்துச் சிரிக்கும் காளியும், மலர்த் தோட்டத்திலே மந்தகாசம் நிறைந்த வதனத்தோடு ஏடுகளில் இதயத்தைச் செலுத்தும் கலைமகளும் எப்படி ஒருவராவார்கள்?

பட்டு நூல்காரர்கள் பேசும் மொழியிலாவது, அவர்களாவது புரிந்துகொள்ளக்கூடிய ஒருமைப்பாடு இருக்கிறது; இந்த பட்டுப்போன 'நூல் காரர்கள்' சொல்லும் கருத்துக்கள், அடிப்படையில் மாறுபடுபவை; ஒன்றையொன்று வெறுத்துக்கொள்பவை.

நல்ல ஏடு இல்லாதவர்கள், தங்களுக்கென்று தனிநாடு இல்லாதவர்கள், உயர்ந்த பழக்கமில்லாதவர்கள், சிறந்த ஒழுக்கமில்லாதவர்கள், யார் யாருக்கோ பிறந்த குழந்தைகளையெல்லாம் மடியில்தூக்கிவைத்துக்கொண்டு 'மகனே,' 'மகளே' என்று கொஞ்சுகின்றனர். 'சோரக் குழந்தை'கள் நம்மீதும் சுமத்தப்பட்டிருக்கின்றன; நாம் சுமை தாங்கிகளானோம்!

பொலிவும் வலிவுமுள்ள நாம் பெற்ற செல்வங்கள் நடுத்தெருவில் நாதியற்றுக் கிடக்க, புண்ணும் புழுவும், உடலெல்லாம் ஊறும் உளுத்ததுகளை தத்தெடுத்துக் கொண்டு தடுமாறுகிறோம்!

இந்தச் சுமையைக் குறைக்கும் பணியைத்தான் ஏற்றுக்கொண்டனர், பகுத்தறிவுவாதிகள்! மெள்ள மெள்ளத் தள்ளி ஆட்டி அசைத்து, அடியோடு கீழ்விழும் நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

'என்மேலே இருந்த சுமை இப்படிக் கீழே விழப் போகிறதே!' என்று அலறும் குரல்கள் நம் செவிகளில் விழத்தான் செய்கின்றன. அந்த உணர்வழிந்த சிந்தனைக்கு உயிர் கொடுக்க முடியாத 'சுமை தாங்கி'கள், காலப்போக்கில் கல் நிலையிலிருந்து மாறுவார்கள்.

மாறிய மனிதர்கள் எழுப்பிய மகத்தான உரிமைக் குரலைத்தான், நான்கு நாட்களிலும் கண்டோம்; மிச்சமிருக்கிற சிலைகளும் ஜீவனுள்ள மனித நிலையை அடைவதற்காக உழைப்போம்!

'தத்துவ வரலாறு' தரும் டி. கே. சீனிவாசன்—மாநில மாநாட்டில்

புதிய 'இராசபார்ட்'—பழைய நோட்டீஸ்!

★ சி. பி. சிற்றரசு ★

புதிய 'இராசபார்ட்'; ஆனால் பழைய நோட்டீஸ்!

'ஆட்ட காலச் சட்டத்தை அனுசரிப்பதே முறை';—'மானேசர் இஷ்டம்போல் புரோகிராம் மாற்றப்படும்';—'வகுப்பு மாறி உட்காருபவர்களிடம் இரட்டிப்புச் சார்ஜ் வாங்கப்படும்';—'அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்படும்';—'கைதட்டிக் கலகம் செய்பவர்களைப் போலீசார் வசம் ஒப்புவிக்கப்படும்';—இப்படி இருக்கும் பழைய நாடக நோட்டீஸ்! இவ்வளவு கடுமையான விதிகளை ஏன் விதித்தார்கள் அந்தக் காலத்தில்?

ஒவ்வொன்றாகக் கவனிப்போம் :—

1. 'ஆட்ட காலச் சட்டத்தை அனுசரிப்பதே முறை.'

'ஆ,' என்ற எழுத்தில் தொடங்கி 'அ' என்ற எழுத்தில் முடித்துவிட்டார்கள்.

இது தவிர, 'ஆட்ட காலச் சட்டம்' என்றால் என்ன?—அப்படி ஒன்று இருந்ததா?'—என்று, நோட்டீஸ் போட்டவனுக்கும் தெரியாது; படிக்கவும் ஆள் இல்லை.

2. 'மானேசர் இஷ்டம் போல் புரோகிராம் மாற்றப்படும்.'

இது ஏன் தெரியுமா? மதுவிலக்குச் சட்டம் அமுலிலில்லாத காலம். அர்ச்சுனன் வேடம் போடுகின்றவன், ஐந்தாம் நெம்பர் கடையில் குடித்துவிட்டு, பீமனை துரியோதனன் என்று நினைத்துக்கொண்டு அன்பாகச் சண்டைக்கு வருவான். காலாகாலத்தில் கொட்டகைக்கு வரமாட்டான். ஆகையால் அர்ச்சுனன் தோன்றி நடிக்க வேண்டிய கட்டங்களை மானேசர் மாற்றவேண்டி வந்தால் வரும்; அதனால்தான் அப்படிச் சொல்லி வைத்தான்.

3. 'வகுப்புமாறி உட்காருபவர்களிடம் இரட்டிப்புச் சார்ஜ் வாங்கப்படும்'

ஏராளமானவர்கள் அப்படி உட்கார்ந்ததுண்டு—அந்தக் காலத்தில்! யாரிடமும் அப்படி இரட்டிப்புச் சார்ஜ் வாங்கியதுமில்லை; அப்படி வாங்கியிருந்தாலும் அது கணக்கில் சேராது.

4. 'அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்படும்.'

அடாத மழைகூடப் பெய்ய வேண்டியதில்லை; கொஞ்சம் லேசாகத் தூறல் வந்தாலே போதும், கொட்டகை குளமாகிவிடும்; அவ்வளவு மோசமான பந்தல்! பிறகு நாடக ரசிகர்கள் எங்கே இருக்கப் போகின்றார்கள்? ரசிகர்களுக்கு மாத்திரம் அந்தத் தொல்லை என்பதில்லை; நடிகர்களுக்கும் அதே தொல்லைதான். ஆனால், அவர்களுக்குக் கிடைத்த பாதுகாப்பு—பழைய சீன்கள்தான்!

5. 'கைதட்டிக் கலகம் செய்பவர்களைப் போலீசார் வசம் ஒப்படைக்கப்படும்'

என்று கடைசியில் முடிப்பான்.

கைதட்டுவதே கலகம் செய்வதற்காகத்தான் என்று நினைத்திருந்த காலம்! மக்கள் அதிகமாக ரசித்ததின் விளைவு, கைதட்டுகிறார்கள் என்றுகூடத் தெரியாத காலம்!

அதிலேயும் ஒரு வேடிக்கை! கலகம் செய்பவர்களைப் பிடித்துப் போலீசார் வசம் ஒப்புவிப்பார்களாம்! அந்தக் கால போலீசை எவ்வளவு மோசமாக நினைத்திருக்கின்றார்கள், பாருங்கள்! போலீஸ்காரர்களே நேரில் பிடிக்கத்

(9-ம் பக்கம் பார்க்க)

பண்டிதர் பயணம்

'சிங்கப்பூருக்குச் சுதந்திரம் கொடு.'

'ஆப்பிரிக்காவில் கறுப்பனை அடிமையாக்காதே!'

'சைப்ரஸ் விடுதலை பெறட்டும்.'

'ஆஸ்திரேலியாவில் வெள்ளையன்—கறுப்பன் வேற்றுமையை ஒழிக்கலாம்.'

இப்படிப் பல மனித தர்மங்களை நிறைவேற்ற காமன் வெல்த் கூட்டணி பயன்படுமா?

அவரவர்கள் நேரடியாக சம்பந்தப்பட்ட விஷயங்களை தீர்க்க முற்படாமல், பிரதமர்கள் கூடுவதும், விருந்துண்பதும், கலைவதும, நகைப்புக்குரிய காட்சியாக இருக்கிறது.

இந்தக் கேளிக்கையில் இந்தியாவும் பங்கேற்பது கண்டிக்கப்பட வேண்டியது. அரசியலில் அக்கறை கொண்டோர் சிந்திக்க வேண்டிய விஷயம், பண்டிதர் பயணம தேவையா (? சரியா (? என்பதுதான்!

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அழிவை ஆரம்பித்துவைக்க நான் அரசாள வரவில்லை. அதன் வளர்ச்சியைப் பாதுகாக்கவே பிரதமரானேன்!"

என்று, சர்ச்சில் முழங்கியது பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு! அவர் பேசிய பிறகு, உலகத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் ஏராளம்!

பூகோளப் படத்திலே பிரிட்டனுக்குச் சொந்தமென்று சிகப்பால் சித்தரிக்கப்பட்டிருந்த பல பாகங்கள், விடுதலைப் பெற்று சுதந்திர நாடுகளாகி விட்டன.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே மாறி, பிரிட்டிஷ் காமன் வெல்த் கூட்டணி தோன்றியது; 'சாம்ராஜ்ய மனப்பான்மையே, மனிதப் பரம்பரைக்குக் கேடு விளைவிக்கும் எண்ணம்' என்பதை, உலகம் ஒத்துக்கொண்டது. சென்ற உலக யுத்தத்தின் எதிர்பாராத விளைவு இது!

இருந்தும், பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சிக்கு சர்ச்சில் மனப்பான்மை மறைவதாகக் காணோம். உதட்டிலே ஜனநாயகம் பேசி, உள்ளத்திலே சொந்த நாட்டின் அபிவிருத்தியிலே அக்கறையும், அதற்கு பூலோகத்தையே அடிமையாக்க வழிகள் என்ன என்பதையும் பற்றி சிந்தித்தவண்ணம இருக்கின்றனர், ஈடன் குழுவினர்!

அடிமைப்பட்ட மக்கள் உரிமை கேட்பது, அவர்களுக்குக் கோபத்தை மூட்டுகிறது; எரிச்சலைக் கிளப்புகிறது.

'நாயே, உனக்கு நாலு முழத்துண்டா!' என்று அதிகாரம பேசி, குளிரானாலும்—வெப்பமானாலும், வெறுங்கோவணாண்டியாக வயலோரத்திலேயே உழவனை அடக்கி வைத்திருக்கும் காலம் மாறிக் கொண்டே வருகிறது.

அதுபோல, 'நாட்டினரே, உமக்கு உரிமையா?' என்று தட்டிக் கேட்க முடியாத காலம்; ஒரு நாட்டின் சுதந்திரத்தை மற்றொரு நாடு பறித்துக்கொள்வதென்பது இன்றைய உலகில் வாதத்திற்குக் கூட ஒத்துக்கொள்ள முடியாத விஷயம; ஆகவேதான, உலகத்தின் கண்களிலே மண்ணைத் தூவ, பேச்சைப பேசுகின்றனா, சர்ச்சில் பரம்பரையினா!

பிரிட்டிஷ் சாமராஜ்யத்தின பிடியிலே சிக்கித் தவிக்கும நாடுகள், ஆசிய-ஆப்பிரிக்கக் கண்டங்களில் இன்னும் ஏராளம் உள்ளன; ஆங்காங்கே நடக்கும் சுதந்திரப் போராட்டங்கள் எண்ணற்றவை; அவைகளிலே வீர மரணத்தை வரவழைப்பவர்கள் ஆயிரக்கணக்கானோர்!

சிங்கப்பூரிலே ஆரம்பித்து ஜிப்ரால்டா வரையிலே பிரிட்டிஷ் போர்வீரர்கள் காலனி நாடுகளைப் பாதுகாப்பதிலும, அந்தந்த நாடுகளிலே நடக்கும உரிமைக் கிளர்ச்சிகளை அடக்குவதிலேயும் ஈடுபட்டிருக்கின்றனர். மனித சுதந்திரத்தின் முககியத்துவத்தையும், உலக வளர்ச்சியிலேயே மனிதனுககு மனிதன் இருக்கவேண்டிய உறவுமுறைகளையுமபற்றி பிரிட்டிஷ் பேராசிரியர்கள் எழுதிய மகா காவியங்களைபடித்த அதே நேரத்தில், பிரிட்டிஷ் அரசியல் வானில் ஆதிக்கம புரிபவர்கள் பேசும பேச்சுக்களையும், வீசும அடக்கு முறைகளையும் பார்த்தால், நமககுத் திகைப்புஏற்படுகிறது.

"சிங்கப்பூருக்குச் சுதந்திரம கிடையாது;

"சைப்ரஸ் தீவு எங்களிடமே இருக்கும்;

"ஆபபிரிக்காக் கண்டத்து நீக்ரோ அடிமையாகவே இருக்கவேண்டும."

இப்படிப்பட்ட அழுத்தந் திருத்தமான முடிவுகளைப பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிடும போதுதான், பிரிட்டிஷ் ஜனநாயகத்திற்குப் பின்னால் இன்னும் உயிரோடு இருக்கும் ஆதிபத்திய எண்ணம் நமக்குத தென்படுகிறது.

சென்ற உலக யுத்தத்திற்குப் பிறகு இந்திய உபகண்டமும், பர்மாவும், சிலோன் தீவும விடுதலை பெற்றன; ஆனால், தங்கள் ஆதிக்கத்தின் கீழிருந்த வேறெந்த நாட்டிற்கும் சுதந்திரம கொடுக்க மறுத்துவிட்டனர், வெள்ளையர்.

மலேயா, சிங்கப்பூர் முதலிய காலனிகள் ஜப்பானியரின் ஆதிக்கத்தில் சில ஆண்டுகள் இருந்ததின் பலனாக, அந்தந்த

ட. வானன்

நாட்டின் கிராமப்புறங்களில் துப்பாக்கிகளும், குண்டுகளும் நிறைந்துகிடந்தன. தங்கள் நாட்டின் உரிமை மறுக்கப்படுகிறது என்ற நேரத்தில் குண்டையும், துப்பாக்கியையும் வீச ஆரம்பித்தனர், அந்நாட்டில் புரட்சி எண்ணத்திலே வளர்ந்தோர்! பிரிட்டிஷார் தாங்கள் செய்யும் தவறை உணராமல், நாடுபூராவும் அடக்குமுறையை வீசினர்; துப்பாக்கிப் பிடித்த போர் வீரர்கள், மலேயாவின் காடுகளிலும், நாடு நகரங்களிலும் சுற்றினர்; சமீபத்தில் பார்த்த மலேயா பத்திரிகை ஒன்றின் கணக்குப்படி, கிட்டத்தட்ட 10,000 பேர்களாவது இந்த இராணுவ வேட்டையில் சாகடிக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது. இவ்வளவு பெரிய அழிவுக்குப் பிறகு, துங்கு அப்துல் ரெஹ்மான் ஆட்சிபீடம் ஏறி இருக்கிறார். எந்த அளவுக்கு மலேயா சுதந்திரம் பெறப்போகிறது என்பது, இனிமேல் தெரியவேண்டிய விஷயம். புதிய 'அரசியலமைப்பு' எழுதுகிறார்கள்; அதன் விதிகளுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒத்துக்கொள்ளவேண்டும்.

மலேயா தீபகற்பத்தின் கோடியில் இருக்கும சிங்கப்பூரின் கதி பரிதாபகரமான முறையிலே தோற்றமளிக்கிறது. 'ஏமாற்றம' என்ற சொல்லோடு முடிவடைந்த லண்டன் பேச்சுவார்த்தைகள், சென்ற ஒன்றரை ஆண்டுகளாகப் பதவியேற்றிருந்த டேவிட்மார்ஷலை இராஜினாமாச் செய்ய வைத்துவிட்டது.

மந்திரி பதவிக்கு கொள்கைகளை விட்டுக்கொடுத்து, தன் மானத்தை இழந்த நிலையில், பல்லிளித்துப் பதவியிலிருப்போரைப் பின் தொடரும இந்த நாட்டினருக்கு, டேவிட் மார்ஷல் ஒரு சரியான பாடம்! தொழிலாளர் கூட்டணியின் தலைவரான மார்ஷல், இராக் நாட்டிலிருந்து சென்ற யூத பரம்பரையைச் சார்ந்தவர். உள்ளத்திலே நேர்மையும், தூய்மையும் நிறைந்த மார்ஷல், வாழ்க்கையின் அடித்தளத்திலேயிருந்து சுயஉழைப்பிலே முன்னுக்கு வந்த வழக்கறிஞர். ஜனநாயகத்திலே தளராபற்றும், நம்பிக்கையும் கொண்ட மார்ஷல் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னால் பதவியேற்றபோதே, 'சிங்கப்பூரின் சுதந்திரத்திற்கு வழிகிடைக்கா விட்டால், அன்றே பதவியைவிட்டு வெளியேறி விடுவேன்' என்று கூறினார்; இன்று அவர் பதவியை விட்டு வெளியேறி விட்டார்!

"சுதந்திரமாக மற்ற நாடுகளோடு அமர குடியேற்ற நாட்டாட்சியை கேட்டோம்; இந்தத் தீவிலே அவர்களுடைய இராணுவ தளத்தை வைத்துக் கொள்ளக்கூட அனுமதி தந்தோம்; அந்தத்தளத்தைமேற்பார்வை பார்க்கும் பொறுப்பை ஒரு பாதுகாப்புக்குழுவிடம் ஒப்படைக்கச் சொன்னோம்; இந்தக் குழுவில் சரிபாதி உறுப்பினர்கள் சிங்கப்பூர் வாசிகளாகவும், தலைவர் இருசாராருக்கும் ஒப்பமான சிங்கப்பூர் வாசியாகவும் இருக்கலாம் என்றோம்; ஆனால், எதையும் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை,"

என்று மனமொடிந்து கூறிவிட்டு, பதவியிலிருந்து விலகிவிட்டார். மார்ஷலுடைய ஒப்புதல்மேலேயே, அடுத்தபடி பதவியேறி இருக்கும் லீகுவான் யீ (ஹாரி லீ), எல்லோரையும்விட அதிகமான 'வோட்டு'கள் பெற்று சட்டசபை சென்றுள்ள பெயர் பெற்ற வழக்கறிஞர்; சீன பரம்பரையைச் சேர்ந்த லீ, கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் படித்துப் பட்டம் பெற்றவர்; மார்ஷலைவிடத் தீவிரமான அரசியல் அபிப்ராயங்கள் கொண்டவர்.

'இன்பத் தமிழ் எங்கள் இன்னுயிரன்றோ! இலக்கிய வளமில்லா இந்தி ஏன் இந்நாட்டில்? கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தக்குடியின் மொழிப்பற்றியா பிரச்சினை' என, 'மொழிப் பிரச்சினை'யைக் காட்டித் தமிழ் முழக்கமிடுகிறார் தோழர் கண்ணதாசன் அவர்கள்.

சிங்கப்பூரின் 12 இலட்ச மக்களில் எட்டு இலட்சத்திற்கு மேல் சைனக்காரர்கள்; அதிலும், இதில் பாதிபேர் 25 வயதுக்குட்பட்ட வாலிபர்கள். சிங்கப்பூர் பூராவும் உள்ள சைனக்காரர்களின் உள்ளன்பைப்பெற்ற லீ, இன்று ஆட்சி பீடத்தில் ஏறி இருப்பது அந்நாட்டின் விடுதலையைத் துரிதப்படுத்தும் என்று நிச்சயமாக நம்பலாம். இந்த நேரத்திலே, சிங்கப்பூரையே ஸ்தம்பிக்கவைக்கும் வேலை நிறுத்தத்தை லீ-யால் நிச்சயமாகச் செய்ய முடியும். நல்ல வேளையிலே அரசாங்கத்தை ஒப்படைத்துவிட்டுத்தான், மார்ஷல், செள-பென்-லாயைச் சந்திக்கச் சைனாவுக்குப் புறப்பட்டுவிட்டார்.

நேரான வழிகளை விட்டு குறுக்கு வழியிலே குண்டு வீசும் முறைகளிலே புகுந்திருந்தால், மார்ஷலையும், லீயையும் ஒழித்துக்கட்டியிருப்பர், பிரிட்டிஷார். ஆனால், அவர்கள் பொறுமையோடு நடத்தும் உரிமைப் போர், அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவே, பிரிட்டிஷார் விழிக்கின்றனர். என்ன கூறுவது என்று புரியாமல், 'உலக சமாதானத்திற்கும், அந்த நாட்டு மக்களின் வாழ்க்கை சுபீட்சத்திற்கும், சிங்கப்பூர் எங்களிடமே இருக்கவேண்டும்!' என்று விசித்திரவாதம் பேசுகிறார், சர்ச்சிலின் சிஷ்யர் அந்தோனி ஈடன்.

சிங்கப்பூர் இருக்கும் இடத்தை பூகோளப் படத்திலே பார்த்தவர்களுக்கு, அதன் சுதந்திரத்தைத் தங்கள் வசம் வைத்துக்கொள்ள ஈடன் ஏன் அவ்வளவு சிரமப்படுகிறார் என்று தெரிந்து கொள்வர். சிங்கப்பூர் சுதந்திரமடைந்து தனி நாடானால், நிச்சயம், சீனர்கள் ஆட்சிதானே அங்கு நிலவ ஆரம்பிக்கும்? அப்படி ஆட்சிப் பீடத்திற்கு வரும சீனர்கள், செஞ்சீனாவோடுசேர்ந்துகொள்ள நேரிட்டால்........? இந்தக் கேள்வியை நினைத்தாலே, வெள்ளையர்களுக்கு, கண்களில் கோபக் கனல் எழும்புகிறது; அவர்கள் மனக்கண்முன் தென்கிழக்கு ஆசியாவின் ரப்பர், டின், துத்தநாகம், மரம், மாங்கனீஸ்—இப்படிப் பற்பல மூலப் பொருள்களும் தோன்றுகின்றன. தென்கிழக்கு ஆசியாவிலும், இந்து மகா சமுத்திரம், பசிபிக் கடல் இரண்டிலும் இருக்கும் ஆதிக்கம் அடியோடு ஒழியும நாள் அவர்கள் கண்ணுக்குத் தெரிகிறது.



வையகம் வாழ, அறமும் அன்பும் தழைக்க, அனைத்துயிரும் இன்பற்றிருக்க அரசபோகத்தையும் அரண்மனை வாழ்வையும் துறந்து வெளியேறி, அறிவைத் தேடி, பின்னர் ஆரியத்தைச் சாடி, அன்பு நெறியை மக்கட்குப் போதித்த 'புத்தர் நெறி'யை தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், மாநாட்டில் விளக்குகிறார்.



ஆட்சியாளர்களின் ஆகாத செயலை—ஆணவப் போக்கினை சட்டசபையிலே இடித்துரைத்தாலும் அமைதி நிறைந்தவராய்த் தோற்றமளிக்கும் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல் ஏ. அவர்கள், மாநில மாநாட்டில் தோள்தை விளக்கம் தருகிறார்.

கழகமும் - தேர்தலும்

இரா. நெடுஞ்செழியன்

மே திங்களில் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநில மாநாட்டில், கழகம் அடுத்துவரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவு செய்திருப்பதானது, நம் நாட்டு அரசியல் உலகில் நடமாடும் பலரின் கவனத்தைப் பல்வேறு வகைகளில் ஈர்த்திருக்கிறது.

கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிடும் என்ற செய்தியைக் கேள்வியுற்றவுடன், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளிப்படையில் போட்டியை வரவேற்கும் பெருந்தகையாளர்களைப்போல் தங்களைக் காட்டிக்கொண்டாலும், உள்ளுக்குள்ளே அச்சமும், அருவருப்பும், வேதனையும் கொண்டவர்களைப்போல் பேச்சிலும், எழுத்திலும் ஏதேதோ உளறிக்கொட்டி இடர்ப்பாடு பட்டுவருகிறார்கள்.

பொறுமையால் பொசுங்கிக் கருகிக் கொண்டிருக்கும் வேறு சில மாற்றுக் கட்சியினர்—கழகம் வளர்ந்தால் தங்கள் கட்சி வளர முடியாதே; கழகத்தவர் சட்டமன்றம் புகுந்தால், 'ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரையாம்' என்ற பழமொழிக்கிணங்க காட்சியளிக்கும் தங்களுக்கு இடமில்லாமல் போகுமே; எந்நிலையில் நின்று எம்முறையைக் கையாண்டேனும் கழகத்தை முறியடிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதற்கான முறையில், இப்பொழுதிருந்தே சூழ்ச்சித் திட்டங்களைக் கையாள முற்பட்டிருக்கின்றனர்.

வேறு சிலர்-கழகம்பொதுத் தேர்தலில் போட்டியிடுவதா? அந்தச் செயலே அதற்குப் பெருமையளிக்கக் கூடிய ஒன்றாயிற்றே? கழகம் போட்டியிடுவதையும், கழகத்தைச் சேர்ந்த சிலர் சட்ட மன்றம் புகுவதையும், சட்டமன்றத்தில் குரல் எழுப்புவதையும் எப்படிப் பார்த்துக்கொண்டே வாளாக் கிடப்பது? எது எக்கேடு கெட்டாலும் கழகத்தை ஒழிக்க அரும்பாடுபடுவது; எல்லா முறைகளையும் கையாண்டு பார்ப்பது; எதும் இயலவில்லை என்றாலும் வசைமாரி பாடியாவது மன ஆறுதல் பெறுவது என்றெல்லாம் செயற் திட்டங்கள் தீட்ட முனைந்திருக்கின்றனர்.

மற்றுஞ் சிலர் - கழகத்தோடு சிற்சில கருத்து வேறுபாடுகளைத் தாம் கொண்டிருந்தாலும், கழகத்துக்கும் தமக்கும் உள்ள ஒற்றுமைப்பாடுகளை அடிப்படையாக வைத்து, குறைந்த அளவுத்திட்ட உடன்படிக்கையில் இணைந்து நின்று ஆளும் பிற்போக்குக் கட்சியை முறியடிக்க வேண்டும் என்ற ஆவலை வெளிப்படுத்தியுள்ளனர்.

வேறு சிலர்--கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதை வரவேற்று, கழகத்திற்கும் தமக்கும் இருக்கும் கருத்து வேறுபாடுகளின் காரணமாக இணைந்து நிற்க இயலாவிட்டாலும், வாய்ப்புக்கும் வசதிக்கும் ஏற்றபடி ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து உதவி புரிந்து கொள்ளும் தன்மை ஏற்பட்டால் நல்லது என்று எதிர்பார்க்கின்றனர்.

பொதுமக்களில் முற்போக்கு எண்ணம் படைத்தவர்கள்—கழகம் தேர்தலில் போட்டியிடுவதை மகிழ்ச்சியுடன் வரவேற்று, அது சிறந்த எதிர்க் கட்சியாக விளங்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவிக்கின்றனர்.

எதைப் பற்றியும் கவலைப் படாத பொதுமக்கள்—என்னமோ, ஏதோ என்ற முறையில், வழக்கம்போல் வாளாயிருந்து வருகின்றனர்.

கழகத்தின் ஆதரவாளராகக் காட்சியளிப்போர் — கழகத்தின் முடிவை மிக்க மகிழ்ச்சியோடும், உணர்ச்சியோடும் வரவேற்று நிற்கின்றனர்.

கழகத்தின் உறுப்பினர்கள் —உணர்ச்சியோடும், ஊக்கத்தோடும், பெருமையோடும், பெருமகிழ்ச்சியோடும் தேர்தலை எதிர்பார்த்திருக்கின்றனர்.

கழகத்தின் பொறுப்புகளைத் தாங்கிக் கழகத்தைக் கட்டிக் காத்து வருவதிலே கண்ணும் கருத்துமாக ஆங்காங்கு விளங்கிவரும் பொறுப்பாளர்கள்—எதிர்ப்புக்கு அஞ்சாமல், எவனத்தைப் பொருட்படுத்தாமல், கடமையுணர்ச்சியோடும், கண்ணியவுணர்ச்சியோடும், கருத்தோடும், கவலையோடும், உறுதியோடும், ஊக்கத்தோடும் எடுத்த முடிவைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமென்பதிலே கவனம் செலுத்தி வருகின்றனர்.

பொதுப்படையாகப் பார்க்கும்போது, கழகப் பற்றுடையோராலும், கழக ஆதரவாளராலும், நடுநிலையில் நின்று நல்ல முறையில் பார்க்கும் பொது மக்களாலும் தேர்தல் பற்றிய திருச்சி மாநாட்டு முடிவு பெரிதும் வரவேற்கப்படுகின்றது என்பதும், பொதுவாக உள்ள படித்தோரிடத்திலும், பாமரரிடத்திலும், நடுநிலை அரசியல் வாதிகளிடத்திலும் கழகம் இதுவரையில் பெறாத ஒருவகை உயர்மதிப்பை இப்பொழுது பெற்றிருக்கிறது என்று சொல்லலாம்.

கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது கண்டு உள்ளம் பொறாத மாற்றுக் கட்சியினர், இப்பொழுதிருந்தே இல்லாததும் பொல்லாததும் புனைந்துகூறி, இழித்தும் பழித்தும் சொல்லித், தொல்லைகளையும் துயரங்களையும் கொடுத்து, இல்லாத குறைகளையும் குறறங்களையும் சுமத்திக், கறைகளை ஏற்படுத்திப், பொது மக்களின் வெறுப்பைத் திருப்பிவிடும் வகையில் என்னென்ன பொய்யாகப் புனைந்து கூறமுடியுமோ அவற்றையெல்லாம் புனைந்து கூறிக் கழகத்தை ஒழித்துக் கட்டுவது என்று முனைந்து விட்டனர்.

இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, கழகத்தவர்கள், தம் சீரிய கொள்கைகளையும் திட்டங்களையும் தெள்ளத் தெளிய இனிய முறையில் பொது மக்கள் முன்னிலையில் எடுத்து வைத்துக், கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் மிகவாக மேற்கொண்டு, கடமைகளைச் சரிவர இடையறாது ஆற்றிப், பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ளுகிறார்கள் என்ற சொல்லை நடுநிலையாளர்களின் வாயினின்றும் பெறுவதை எப்படிச் சீரிய நோக்கமாக இதுவரையில் கொண்டிருந்தார்களோ அப்படித்தான் இனியும் கொள்ளுவார்கள் — கொள்ள வேண்டும்.

ஒரு அரசியல் கட்சி தன் அரசியல் — பொருளாதார — சமூகத் திட்டங்களையும் கொள்கைகளையும் நடைமுறைப் படுத்த, பிரச்சாரம் ஒரு சீரிய கருவியாக விளங்கனாலும், அதனை மட்டுமே நம்பி முழு வெற்றியடைய இயலாது. பிரச்சாரத்தின் மூலம் நிறைவேற்றவேண்டிய திட்டங்களை நிறைவேற்றிச், சட்டத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டிய திட்டங்களை அதன் மூலமே நிறைவேற்ற வேண்டி வரும். சட்டத்தின் மூலம் நிறைவேற்ற ஆட்சி ஆதிக்கம் அந்தக் கட்சியின் [illegible] வந்ததாக வேண்டும்.

ஆட்சி ஆதிக்கத்தைக் கைப்பற்ற ஒரு கட்சி கடைப்பிடிக்கக்கூடிய முறைகள் இரண்டு; ஒன்று, படைபலம் கொண்டு ஆட்சியைப் பலாத்கார முறையில் கைப்பற்றுவது; மற்றொன்று, சனநாயக முறையில் தேர்தலில் போட்டியிட்டு ஆட்சி ஆதிக்கத்தைக் கைப்பற்றுவது ஆகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அது பலாத்கார முறையை என்றுமே விரும்புவதுமில்லை, நம்புவதுமில்லை. இரண்டாவது முறைதான் கழகத்துக்கு ஒருப்பட்ட முறையாகும்.

சனநாயக அடிப்படையில் சட்டமன்றத்தில் புகுவதில் ஒரு கட்சி இரண்டு முறையைக் கையாளலாம்; ஒன்று, தானே நேரடியாகத் தேர்தலில் போட்டியிட்டுச் சட்ட மன்றம் புகுவது; மற்றொன்று, தனக்கு ஒத்துவரக்கூடிய மற்ற தனிப்பட்டவர்களையோ, மற்ற கட்சியினரையோ தனக்குப் பதிலாக அனுப்பிவைப்பது.

திராவிட முன்னேற்றக் கழகம், சென்ற பொதுத் தேர்தலில் இரண்டாவது முறையைக் கையாண்டது. அதன்பின் விளைவுகள் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக அமையாத காரணத்தாலும், கழகத்திடம் உறுதிமொழி அளித்துவிட்டுக் கழக ஆதரவுடன் சட்டமன்றம்—பாராளுமன்றம் புகுந்தவர்களில் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரைத் தவிர பெரும்பாலோர் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டவர்களாகவும், உறுதிமொழிகளை உதறித் தள்ளியவர்களாகவும், கட்சிவிட்டுக் கட்சி மாறும் துரோகிகளாகவும் காட்சியளித்தனர்.

இந்த நிலைகண்ட கழகப் பற்றுடையோரும், கழக ஆதரவாளர்களும், 'தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்கள் ஒரு சிலராவது நேரடியாகச் சட்டமன்றத்தில் புகுந்தால்தான், கழகத்தின் கோரிக்கைகளை உரத்த—உரிய குரலில் எடுத்துவைக்க முடியும்' என்றும், 'அவைகளை, ஒரு காலமில்லாவிட்டாலும் ஒரு காலத்தில் சட்டங்களாக்கி நடைமுறையில் கொண்டுவர முடியும்' என்றும், 'மேலும், கழகத்தின் ஆதரவு பெற்றுச் செல்பவர்களைக் கூடுமானவரையில் அங்குமிங்கும் ஓடாமல், நிலைதடுமாறாமல் பார்த்துக்கொள்ளவும் கட்டுப்படுத்தவும் முடியும்' என்றும் எண்ணத் தொடங்கினார்கள். அந்த எண்ணத்தின் விளைவே திருச்சி மாநாட்டுத் தேர்தல் தீர்மானமாகும்.

சட்ட மன்றத்தில் புகும் கட்சி—ஒன்று ஆளுங் கட்சியாக விளங்கலாம்; அல்லது ஆளுங் கட்சிக்கு ஆதரவான கட்சியாக விளங்கலாம்; அல்லது எதிர்க் கட்சியாக விளங்கலாம். திராவிட முன்னேற்றக் கழகம் எப்பாடுபட்டேனும் ஆளுங் கட்சியாக ஆகித்தீரவேண்டும் என்ற விடாப்பிடியான விருப்பத்தையோ

[illegible] மாநாட்டுப் பந்தலை, [illegible] ஒளிவீட்டும் மின் [illegible] [illegible] அவர்கள் வெள்ளிச் சந்தனப் பேலா தந்து பாராட்டுகிறார்.

நமது ஏடு-பெரிய அளவில்?

1953-ம் ஆண்டு மே மாதம் 28-ந் தேதி காலை 10 மணிக்கு அண்ணா அவர்கள், 'திராவிடன்' அலுவலகத்திற்கு வந்தார்கள்; அது சமயம் நான் சட்டைகூட போடாமல் எழுதிக்கொண்டிருந்தேன்.

'நடராசன், புறப்படு உடனே' என்றார்கள், அண்ணா; 'காபி சாப்பிட்டுவிட்டுப்போகலாம்' என்றேன்; 'அதெல்லாம் இருக்கட்டும் புறப்படு' என்றார்கள்; நான் சட்டை உடுத்திக்கொண்டு வருவதற்குக்கூட அனுமதிக்காமல், மேலே ஒரு துண்டு எடுத்துப்போட்டு அழைத்துச் சென்றார்கள்!

அங்கிருந்து 'மன்றம்' அலுவலகம் சென்றோம்; நாவலர் கட்டுரை தீட்டிக்கொண்டிருந்தார்; உடனே அதை நிறுத்தச் சொல்லிவிட்டு, 'போராட்டம் நடத்துவதென்று முடிவு செய்தோமே—அதற்கு அடிப்படையானதும், முக்கியமானதுமான வேலையதைத் தயாரித்துக் கொண்டீர்களா?' என்று கேட்டார்கள், அண்ணா!

எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை!

'வருணாச்சிரமக் கல்வித் திட்டத்தை எதிர்த்தும், டால்மியாபுரப் பெயர் மாற்றத்திற்கான கிளர்ச்சிக்கும், இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் தென்னாட்டினரைப் பொதுவாக இழித்தும் பழித்தும் பேசிய போக்கைக் கண்டித்தும் நாம் அறப்போர் நடத்துவதாக மாநாட்டில் முடிவு செய்துவிட்டோமே; இக்கிளர்ச்சிகளில் நாம் ஈடுபடும்போது, அரசியலார் தரப்பில் நின்று நம் இயக்கத்தின்மீது மாசு கற்பிக்க—பழிசுமத்த தேசியப் பத்திரிகைகள் முற்படுமானால், அதற்குத் தக்க மறுப்புக் கூறவும் பொதுமக்களுக்கு நம் பணியின் அவசியம் பற்றி கூடுமான வரை விளக்கவும் தின இதழ் ஒன்று வேண்டாமா?' என்று அண்ணா கேட்டார்கள்.

'திராவிட நாடு' உள்ளிட்ட வார இதழ்களில் நம் கழகக் கருத்தை விளக்கலாம்—என்றோம்; அண்ணா அதற்கு இணங்கினார்களில்லை; 'நம் கழகத்திற்கென்று சிறிய அளவிலாகிலும் தின இதழ் ஒன்று துவக்கப்பட்ட பின்னர்தான் நாம் அறப்போரில் ஈடுபடவேண்டும்' என்றும், 'அவ்விதம் துவக்க இயலவில்லையெனில் நம் கிளர்ச்சிகளை ஒத்திப்போட வேண்டுமே தவிர, நம் கழகத்திற்கென்று தின இதழ் இல்லாமல் அறப்போராட்டத்தில் ஈடுபடுவது நன்மை பயக்காது,' என்றும் கூறினார்கள்.

உடனே, 'மன்றம்' அலுவலகத்திலிருந்தவாறே, 'நம் நாடு' தின இதழுக்காக அனுமதி கோரி சென்னை பிரதம மாஜிஸ்திரேட் அவர்களுக்கு எழுதப்பட்டது; தொடர்ந்து அதற்கான மற்ற வேலைகளிலும் கவலை செலுத்தப்பட்டு, 1953 ஜூன் 15-ம் நாள் 'நம் நாடு'—நமது ஏடு, அறிஞர் அண்ணா அவர்களை ஆசிரியராகவும், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை வெளியிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் உருவாகி, திராவிடத்தில்—திராவிடர்களின் இல்லங்களில்—ஏன், திராவிட மக்களின் இதயங்களில் தவழத் துவங்கிற்று.

'மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது' என்பார்களே, அதைப்போல, நமது 'நம் நாடு,' அளவில் சிறியதுதான்!—ஆனால், 'நம் நாடு' வெளியிடும் செய்திகளும், தரும் கருத்துக்களும் தரத்தில் உயர்ந்தவை; நமது மாற்றாரும்—ஏன், ஆளும் வர்க்கத்தினரும்கூட குழப்ப நிலையிலிருந்து தெளிவு பெறுவதற்கு, 'நம் நாடு' அவர்களுக்கு 'டானிக்' ஆகப் பயன்பட்டு வருகிறது. அந்த வகையில், திராவிடத்தின் உண்மையான விடுதலைக்கும், திராவிட மக்களின் நல்வாழ்வுக்கும், பொதுவாக மனித குல மேன்மைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றிவரும் பணியினை 'நம் நாடு' சுருங்கச் சொல்லி விளங்க வைத்து வருகிறது.

மும்முனைப் போராட்டத்தின் போதும், சர்வ கட்சிக் கூட்டணி ஆற்றிய மகத்தான பணியின்போதும், 'நம் நாடு' சாதித்த தீவிரத் தொண்டினை எல்லாக் கட்சியினரும் மனமார ஒப்புக்கொள்வார்களென்று கூறின் மிகையாகாது. அதைவிட, ஆளும் வர்க்கமும் 'நம் நாடு' இதழின் மாபெரும் சக்தியை உணரும் நிலை ஏற்பட்டது.

மாற்றாரும், ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்போரும் நம் கழக ஏட்டின் மேன்மையை உணர்ந்துள்ள அதே சமயத்தில், கழகத் தோழர்களில் சிலர், அந்த வெற்றிக் களிப்பில், 'நம் நாடு' இதழின் வளர்ச்சியைப் பற்றி அக்கறை செலுத்துவதை அறவே மறந்து வருகின்றனர்.

நமது 'நம் நாடு'—அளவில் பெரிதாக வேண்டும்; மேலும் பல செய்திகளைத் தாங்கி வெளிவர வேண்டும்—என்றெல்லாம் நாம் ஆசைப்படுகிறோம்.

இன்னும் சில ஊர்களில் நூற்றுக்கு மேற்பட்ட ரூபாய்களைச் செலவழித்துப் பிரமாதமாகக் கூட்டங்களை நடத்துவார்கள்; அக்கிளையின் முக்கியஸ்தரை அணுகி, 'நம் நாடு' இதழ் எங்கே—என்று கேட்டால், 'நாளைய தினம் சந்தாப் பணம் அனுப்ப இருக்கிறோம்' என்று சமாதானம் கூறுகின்றனர்.

'நம் நாடு' மேலும் எல்லாச் சிறப்பும் பெற்று பவனி வருதல் வேண்டும் என்பதில் நமக்கு அளவுகடந்த ஆசை; ஆனால், அதற்கு அளிக்கவேண்

(11-ம் பக்கம் பார்க்க)



முதிர்ந்த வயதானாலும் முறுக்குத் தளராமல், தளர்ந்த உடலானாலும் தளரா நெஞ்சினராய் இலட்சிய முழக்கமிடும் சேலத்துப் பெரியார்! திராவிடர் பாசறையின்—மாநாட்டின் திறப்பாளர்! உயர் பண்பாளர்! தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள்.



சுயமரியாதைச் சுடர்களாய், பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு வித்திட்ட கொள்கை வீரர்களாய், எதையும் தாங்கும் இதயத்தினராய்—அஞ்சா நெஞ்சினராய் இலட்சியங்களுக்காகவே உயிர் வாழ்ந்து, 'மறைந்த இயக்க மாவீரர்கள்' வரலாற்றை நமக்கு வீர உணர்ச்சி கொழுந்து விட்டெரியும் வகையில் எடுத்துச் சொல்லி, நம்மை மாவீரர்களாகத் திகழவைக்கிறார், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள்.

...ந்த நிலைமை ஏற்பட்டாலும் ஆளுங் கட்சியாக ஆகியே தீரக்கூடாது என்ற விடாப்பிடியான வெறுப்பையோ கொண்டிருக்கவில்லை. சூழ்நிலைகளுக்கு ஏற்ப நேரிய சனநாயகக் கடமைகளை நிறைவேற்றுவதிலேயே கழகம் தன் கவனத்தைச் செலுத்த விரும்பியுள்ளது. இன்றைக்குள்ள சூழ்நிலையில் கழகம் ஆளுங் கட்சியாகவோ, ஆளும் பிறம்பாக்குக் கட்சிக்கு ஆதரவான கட்சியாகவோ இருப்பதை எதிர்பார்த்துத் தேர்தலுக்கு நிற்கவில்லை. நல்ல ஒரு (எ)திர்க்கட்சியாக இருந்து ஆட்சியின் சனநாயகக் கடமைகளைச் சரிவர நிறைவேற்றத் தூண்டுவதிலும், ஆட்சியின் குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டி அவற்றைப் போக்குவதிலும், ஆட்சியின் நேரிய செயல்களுக்கு மேன்மேலும் ஊக்கம் அளிப்பதிலும், ஆட்சியை நல்வழிப்படுத்துவதிலும் கவனம் செலுத்தலாம் என்ற நோக்கத்துடன்தான் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளது.

தேர்தலில் போட்டியிடுவது என்று கழகம் முடிவு செய்தவுடன், முழுக்கமுழுக்க எல்லா இடங்களிலும் வெற்றி பெறுவோம்; இல்லையென்றால், தூக்கில் மாட்டிக்கொண்டு தொங்குவோம்—என்று கழகத்தவர் வீராப்பு பேசுவதுபோல் நினைத்துக்கொண்டு, மாற்றுக் கட்சியினர் ஏதேதோ உளறிக் கொட்டி வருகின்றனர்.

தேர்தலில் போட்டியிடுவது அரசியல் கட்சியின் சனநாயகக் கடமைகளில் ஒன்று என்ற எண்ணத்துடன்தான் கழகம் போட்டியிடுகிறதேயல்லாமல், வெற்றியை மட்டுமே நினைத்துக்கொண்டு அல்ல. வெற்றி பெற்றால் சட்டமன்றம் புகுந்து கடமையை ஆற்றுவோம்; தோல்வியுற்றால் மீண்டும் வெற்றி ஏற்படும் வரையில் முயற்சி செய்வோம்—என்ற எண்ணத்துடன்தான், கழகத் தோழர்கள் கடமையாற்றி வருவார்கள்.

கால்பந்து போட்டிகளில் கலந்துகொள்ளும் குழுக்கள் எல்லாம், தாம் வெற்றிபெறவே நிற்கிறோம்; இல்லையானால் (சா)வோம்—என்று போட்டியிடுவதில்லை. இறுதியில் ஒரே ஒரு குழுதான் வெற்றி பெற முடிகிறது. மற்ற குழுக்கள், 'செல்லுவோம்; மீண்டும் வருவோம்; போட்டியிடுவோம்; வெற்றி பெறுவோம்' என்ற நம்பிக்கையுடன்தான் செல்லும். தி. மு. கழகம் தோல்வியுற்றால், அந்தத் தன்மையில்தான் நாட்டில் உலாவும்.

திராவிடக் கழகத்தை வளைத்தாயிற்று; கம்யூனிஸ்டுக் கட்சியைப் பணியச் செய்தாயிற்று; சோஷலிஸ்டுகளை முறியடித்தாகிவிட்டது; இனி தம்மை எதிர்ப்பார் எவரும் இல்லை; தம் விருப்பப்படி தமக்குக் கீழ்ப்படிகிற யாரையும், தாம் கட்டளையிடுகிற அந்த அளவிலேயே ஆட்சி மன்றத்திற்குக் கொண்டுவந்து, தம் விருப்பப்படி அவர்களை எல்லாம் ஆட்டிப்படைக்கலாம்—என்று, தோழர் காமராசர் போன்ற காங்கிரசுத் தலைவர்கள் எண்ணிக்கொண்டிருக்கும் ஆணவ எண்ணத்திற்குச் சம்மட்டி அடி கொடுக்கும் நடவடிக்கையே தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிடுவதாகும்.

போட்டி எதுவும் இல்லாமல், எளிதில் சட்டமன்றம் புகுந்து யதேச்சாதிகாரம் புரியலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கும் காங்கிரசுக்காரர்கள் கூட்டத்தில், கழகத்தின் முடிவு இடிமின்னலாய் விழச் செய்யும் என்பது திண்ணம்.

எதாக குழுவின் காலில் பல தடவைகள் அடிபட்டு, மீண்டும் மீண்டும் திரும்ப வந்து நீண்ட நேரம் கஷ்டப்பட்ட பிறகே பந்தைக் 'கோலில்' விழச் செய்வது போன்ற நிலைமை காங்கிரசுக்கு ஏற்பட்டாலும் ஏற்படுமேயல்லாமல், போட்டியே இல்லாமல் வெற்றி பெறுவது என்ற நிலைமைமட்டும் ஒரு நாளும் ஏற்படக் கழகம் விடாது.

தேர்தலில் போட்டியிடுவது என்ற பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற நாம் கண்ணியத்தையும், கடமையையும், கட்டுப்பாட்டையும் முன்னைவிட மிகவான பொறுப்புணர்ச்சியோடு கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். புதுப் புது உறுப்பினர்களைச் சேர்ப்பது, புதுப் புதுக் கிளைகளைத் தோற்றுவிப்பது, கட்டுக்கோப்பைக் காப்பாற்றுவது, கழகத்தின் சக்தியை ஒழுங்கான முறையில் திரட்டுவது, திறமையாகத் தொண்டாற்றும் பண்பை வளர்ப்பது, கழகக் கொள்கைகளையும், திட்டங்களையும், தேர்தல் முடிவையும் ஆங்காங்கு விளக்குவது போன்ற பணிகளைக் கிளைக் கழகத் தோழர்கள் சீரிய முறையில் மேற்கொள்ள வேண்டும்.

எனவே, கழகத்தவர்களாகிய நாம் அனைவரும் கடமையைக் களிப்போடு ஆற்றுவோம்! கட்டுப்பாட்டோடு வளர்வோம்! கண்ணியத்தோடு வாழ்வோம்!

மாற்றாரும் மலைக்கும் நம் மாநாட்டின் வெற்றிக்கு வித்திட்டு—உழைப்பை நல்கி தொண்டாற்றிய வீரர்களின் பட்டியலைத் தயாரிக்கிறார்கள்—வரவேற்புக் குழுத் தலைவரும், ஓவியத் திறப்பாளரும், மாநாட்டுத் தலைவரும். கழகக் காவலர் அண்ணா அவர்கள் தோழர்களின் நற்பணி குறித்து பாராட்டுரை வழங்குகிறார்.



'ஜனநாயகம் தழைக்கிறதா, செத்து மடிகிறதா? ஜனநாயகத்தைப் பேசுவோரே! அதன் தத்துவம் தெரியுமா உங்களுக்கு?' என வினாவெழுப்புகிறார், 'ஜனநாயக'த்தைப்பற்றி மாநாட்டில் தோழர் நீ. மனோகரன் அவர்கள்.

'தமிழ் மாதாவே! உன்னை உலகறியாது—நீ உலகறியாதவள் என்று கூறுகிறார்களம்மா, அந்த உன்மத்தர்கள்! எப்போதம்மா இதுபோன்ற துரோகிகளைத் தோற்றுவிக்க முற்பட்டாய்? வீரர்களை—தாயகப்பற்றுக் கொண்ட வீரர்களை மட்டுமே தோற்றுவிக்கும் உன் உதிரத்தில், எப்படியம்மா, உன்னை உலகறியாது என்று கூறும் காமராசர்களும், இதர மந்திரிகளும் தோன்றினார்கள?' என உள்ளம் உருகக்கேட்டு, 'திராவிடத்தின் உலகத் தொடர்புகள்' பற்றிய வரலாற்றுச் சம்பவங்களை நம் முன்னே நிறுத்தி, இலட்சிய முழக்கமிடுகிறார் தோழர் மு. கருணாநிதி அவர்கள்.

குடிதழீயிக் கோலோச்சும் அரசமைப்பையும், நெறிபிறழா நீதியினை நிலைநிறுத்த புலவர் பெருமக்கள் ஆற்றிய பொதுப்பணிகளையும் கொண்ட 'தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துக்களை' தேன் தமிழில் தருகிறார் க. அன்பழகன் அவர்கள்.

விடுதலை வரலாறு!

[9-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

இப்படி மட்டுமல்ல, இவருக்கு வருமானம் கிடைப்பது; மராக்கேஷ் பகுதியில், 'தொழில்' நடத்தும் சுமார் 6,000 விலைமாதர்களின் வருமானத்தில் ஒரு பகுதியையும் இவர் தட்டிப் பறித்துக்கொள்கிறாராம், பெருமிதத்தோடு!

இந்தப் பாட்சாவைத் தூண்டிவிட்டு, மொராக்கோ மக்களை அடக்க முயற்சித்து வந்தனர். அவரை, 'சுல்தானை நாடு கடத்த வேண்டும்' என்று மனுச்செய்து கொள்ளுமாறு செய்தனர்.

1953-ம் ஆண்டு, ஆகஸ்டு 20-ம் நாள், சிதிமுகம்மது பென் யூசுப் நாடு கடத்தப்பட்டார்.

சிதிமுகம்மது பென் மௌலே அராபா என்ற ஒரு 'பொம்மை'யை—தங்கள் 'கைப்பாவை'யைச் சிம்மாசனம் ஏற்றினர், பிரெஞ்சுக்காரர்கள்!

கொதித்தனர் மக்கள்! திகைத்துப் போயினர்! விடுதலை தாகத்தால் உந்தப்பட்டுச் சீறி எழுந்தனர்!

'பெர்பர்' இனமக்களும், பிரெஞ்சுக்காரரின் சதியை உணர்ந்துகொண்டு, அராபியருடன் கைகோர்த்துக்கொண்டு, போரிட ஆரம்பித்தனர்.

வேடிக்கை என்னவெனில், 'பெர்பர்'கள், 'மூர்'கள் என்றும் அழைக்கப்படுவர். இவர்கள் இந்தியத் துணைக்கண்டத்து மௌரியர்களின் சந்ததியினர் என்றும், கூறுவர், சரித்திராசிரியர் பலர். இந்த 'மூர்'கள், சுமார் 749 ஆண்டுகள், 8-ம் நூற்றாண்டுத் துவக்கத்திலிருந்து 1492-ம் ஆண்டு ஜனவரி வரை ஸ்பெயின் நாட்டை ஆண்டிருக்கின்றனர். உலகிலேயே அதிகமான நூற்றாண்டுகள் பிறிதொரு இனத்தவருக்கு அடிமையாயிருந்தவர்கள் இந்த ஸ்பெயின் நாட்டவர்தான். இவர்கள், பிற்காலத்தில் மொராக்கோவின் ஒரு பகுதியை அடிமை கொண்டனர்.

மொராக்கோவில் பிரெஞ்சுக்காரரின் பிரித்தாளும் சூழ்ச்சி தோற்றது! 'பெர்பர்'கள், மராக்கேஷ் பாட்சாவைத் தலைவனாக ஏற்க மறுத்துவிட்டனர்!

பென்யூசுப் நாடு கடத்தப்படும் வரை, இஸ்திக்லால்' கட்சியினர் அமைதியாகவே, ஜனநாயக வழிகளில் சுதந்திரத்திற்காகப்போராடி வந்தனர் ஆனால், இப்போது அவர்களிலே பலர் தீவிரவாதிகளாயினர்!

பிரெஞ்சுக்காரர்களைக் கண்ட மாத்திரத்தில் அவர்களைத் தாக்கி, உயிரைக் குடிக்கத் தலைப்பட்டனர்; பிரெஞ்சுப் பிரமுகர்களைக் கொலைசெய்தனர்; உயிருக்குப் பயப்படாதவரே வீட்டைவிட்டு வெளியேற முடிந்தது; அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்ற தீவிரவாதிகளின் ஆத்திரங்கொண்ட இந்தச் செய்கைகளைப் புகலிடமாகக்கொண்டு பிரான்ஸ், இராணுவத்தை ஏவி தினம் நூற்றுக் கணக்கானவர்களைக் கொன்று குவித்தனர்.

'பென்யூசுப் முதலில் நாடு திரும்பவேண்டும்' என்ற கோரிக்கை வலுத்தது. மௌலே அராபா என்ற பொம்மை மன்னனை, மக்கள், சிம்மாசனத்திலிருந்து துரத்த முடிவுசெய்தனர்.

ஓர் நாள்! 'சில பிரெஞ்சுக்காரர்கள் கொல்லப்பட்டார்கள்' என்பதினால், இரத்த வெறிகொண்ட பிரெஞ்சு இராணுவ வெறியர்கள்

அடிமை நிலையை எண்ணும்போது!

எரிமலை இல்லை—நீர்வீழ்ச்சி உண்டு! பாலைவனம் இல்லை—சோலைவனம் எங்கும்! திராவிடம் இப்படித்தான் இருக்கிறது; சொக்க வைக்கிறது காண்போரை! ஆனால், அதன் அடிமை நிலையை எண்ணிடும்போதோ நெஞ்சு நோகிறது.

—அண்ணா

அயித் அமார் என்ற நகரில் பீரங்கிகளைச் சுழலவிட்டனர்! விளைவு—ஆயிரக்கான மக்கள் உயிரிழந்தனர். இரத்த ஆறு பெருக்கெடுத்த நகரில்—இராணுவத்தவர் வெறியேறிய பிறகு, ஒரே ஒரு பூனைமட்டும்தான் உயிரோடு இருந்ததாம்! அப்படியானால், அடக்குமுறையின் வேகத்தை அறிந்து கொள்ள முடியாதா, என்ன?

இத்தனைகொடிய அடக்குமுறையாலும், மக்களின் விடுதலை தாகத்தைத் தணித்துவிட முடியவில்லை!

1955, ஆகஸ்டு 20-ம் நாள்—பென்யூசுப் நாடு கடத்தப்பட்ட இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவன்று, மொராக்கோவெங்கும் பெரும் ஆர்ப்பாட்டம்—கடையடைப்பு—பொதுவேலை நிறுத்தம்—கண்டன ஊர்வலம்—எல்லாம்! அன்றுமட்டும், சுமார் 2,000 மொராக்கோ மக்கள் பிணமாக்கப்பட்டனர்! விளைவு—தொடர்ந்து தீவிரவாதிகளின் தொகையும், அவர்களது நடவடிக்கைகளின் வகையும் வளர்ந்ததுதான்! அமைதி—அழிந்தது! ஆணவம்—அழிவுக்கு ஆளாயிற்று! ஆதிக்கபுரி—கிடுகிடுத்தது! இராணுவம்—சோர்ந்தது! பிரெஞ்சு அரசியல்வாதிகளின் உள்ளத்தில், 'இனி முடியாது' என்ற எண்ணம் குருத்துவிட்டது! தேசியவாதிகளுக்கு வெற்றி முகம் தெரிந்தது!

விடுதலைப் பட்டாளம் என்றுமே—எங்குமே, சோர்வுற்றது கிடையாதே!

வெற்றி பெற்றனர் — மக்கள்! பணிந்தனர் — மதோன்மத்தர்கள்! பென் யூசுப், மொராக்கோவிற்குத் திரும்பி அழைத்து வரப்பட்டார், வெற்றிவீரனாக!

மொராக்கோ மக்கள் மொத்தமாக ஏறத்தாழ 11000 உயிர்களைப் பலி தந்து, வீரம் செறிந்த போராட்டங்களை நடத்தி விடுதலையை—சுதந்திரத்தைப் பெற்றே விட்டனர்.

உலகத்தில் இன்னும் ஒழிக்கப்படாது உயிரோடு உலவும் ஸ்பெயின் நாட்டு பாசிச வெறியன் ஜெனரல் பிராங்கோகூட, ஸ்பானிஷ் மொராக்கோவிற்குச் சுதந்திரம் வழங்கி, மொராக்கோ விடுதலையை முழுமை பெறச்செய்தான்—இந்த ஆண்டில்—இரண்டு திங்களுக்கு முன்!

நம் வாழ்நாளில், கிளர்ச்சியைத் துவக்கி வெற்றி பெற்றுவிட்ட மொராக்கோவின் விடுதலை வரலாற்றைக் கண்ட பின்பும் திராவிடரில், எழுச்சி பெறாதிருப்போர், என்றுமே திருந்த மனமில்லாத சோம்பேறிகளாகத்தானே கருதப்படுவர்!

பிறந்த பொன்னாட்டின் அடிமை விலங்கொடித்து சுதந்திரச் சூரியனாக தன் நாடு திகழ வேண்டுமென விடுதலை விரும்பிகள் தொடுக்கும் 'விடுதலைக் கிளர்ச்சி'களைத் தொகுத்து நம் மனக்கண் முன் நிறுத்துகிறார் தோழர் மதியழகன் அவர்கள்.

சிங்களம்—புட்பகம்—சாவகம் முதலிய தீவு பல வென்று, இமயத்தில் தம் 'இலாஞ்சனை'யைப் பொறித்தது. எட்டுத்திக்கும் எதிரொலிக்க, வெற்றி முரசு கொட்டி கட்டி ஆண்ட திராவிடம், இன்று வடவரின்கீழ் வாழ்வற்று தாழ்நிலையுறுவதோ? 'தனி நாடு அமைப்பும் பொருளாதார வசதிகளும்' குறித்து விளக்கம் தருகிறார் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள்,

'செருமுனை சென்று, வென்று வா மகனே' என்றுரைக்கும், 'ஒளிருவாள அருஞ்சமர் முறுக்கி, களிறெறிந்து பெயர்தல் காளையின் கடனே' என்ற கடமையை வகுத்தவரும் பண்டைய வீரத்தாய்மார்களேயாவர்! அந்தத் 'தாய்க்குல வரலாறு'களை ஆதாரங்களுடன் எடுத்து இயம்புகிறார், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள்.

வாழ்நாளெல்லாம் நம்முடன் இணைந்து, இன்ப துன்பங்களில் சமபங்கேற்கும் மகளிருக்கு சமஉரிமை வழங்க மறுப்பது என்ன நியாயமோ? பெண்ணுரிமை, பேச்சில் மட்டுமல்ல—செயலிலும்தான வெளிப்படுகிறது என்று, ஆங்காங்கே நடைபெறும் 'உரிமைக் கிளர்ச்சி'களைச் சுட்டிக் காட்டி இந்நாட்டின் இழிநிலையைப் போக்க வகை கோலுகிறார் தோழியர் அருண்மொழி அவர்கள்.

விடுதலை வரலாறு!

வரலாறு எழுதப்பட்டுள்ள இருபதாம் நூற்றாண்டு வரை மட்டுமல்ல—உலகில் அழிவையும், ஆக்கத்தையும் ஒருங்கே செயல்படுத்தப்போகிற கணக்கிட முடியாத எதிர்காலத்திலும்கூட, விடுதலை—சுதந்திரம்தான் மனித இனத்தின் நிலைபேறுடைய விலைமதிப்பில்லாச் செல்வமாக விளங்கிவந்திருப்பதும் விளங்கப்போவதுமாகும்.

தெளிவான வரையறைக்குள் அடங்காத விரிந்த பொருள் கொண்ட அந்த விடுதலைக்காக, மக்கள் கூட்டம் இதுவரை தந்துள்ள விலை மதிப்பிட முடியாதது.

இன்றும், 'இருண்ட கண்டம்' என்று அழைக்கப்படும் ஆப்பிரிக்காவிலும், 'மேலைநாட்டு வெள்ளையரின் வேட்டைக்காடு' என்று கருதப்பட்ட ஆசியாவிலும், இன்னும், குளத்தில் மிதக்கும் தேங்காய்கள் போல, பூவுலக நிலப் பரப்பைச் சுற்றி வளைத்து நிற்கும் பரந்த நீலத்திரை கடல்களில் காணப்படும் திட்டுக்கள்—தீவுக் கூட்டங்கள் பலவற்றிலும், மக்கள் அசியாயவிலை தந்தேனும்—ஆயிரக் கணக்கான உயிர்களை பலி கொடுத்தேனும் விடுதலை பெற்றுவிட, பொங்கி எழுந்து போர்க்கோலம் பூண்டு நிற்பதைக் காண்கிறோம்.

சமீப கால ஆதிக்க எதிர்ப்புப் போரில் எப்போதுமே நிகழ்ந்திராத திடுக்கிடும் பல சம்பவங்களுக்கு நிலைக்களனாகி, தொடர்ந்து எழுதப்படவிருக்கிற விடுதலை வரலாற்றிற்கு, குருதி மெருகேறிய புதிய அனுபவங்கள் பலவற்றைப் பெற்றுத் தந்து கொண்டிருக்கும் நாடுகள், இன்று ஊசியிலைக் காடுகளும், பொன் புதைந்த சுரங்கங்களும் நிரம்பிய ஆப்பிரிக்காவில் தான் ஏராளம். சுருங்கக் கூறின், மக்கள் இனத்தின் நிகழ்காலத் தலைமுறையின் விடுதலைப் போராட்டக்கேந்திரம் ஆப்பிரிக்காவில்தான் அமைந்திருக்கிறது.

உலகெங்குமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற அந்த விடுதலைக் கிளர்ச்சிகளின் ஓர் ஈடு எடுப்பற்ற அங்கமாக விளங்கும் திராவிட இனமக்களின் விடுதலைப் போராட்டத்தின் வீரர்களாக அணிவகுத்து நிற்கும் நாம், நம்மைப்போன்று தாயக மீட்பிற்காக—சுதந்திரத்திற்காகக் கிளர்ந்தெழுந்து, அன்னிய ஆதிக்கபுரியினரை எதிர்த்து ஜீவ மரணப் போரில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்கெல்லாம் நமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம், திருச்சி மாநில மாநாட்டில்!

உலகில் பரவலாக நடைபெறும் விடுதலைக் கிளர்ச்சிகள் அடிமைப்பட்டுக்கிடக்கும் மக்களுக்கு பரஸ்பரம் உணர்ச்சியூட்டும் வல்லமை பெற்றவை. வெற்றி பெற்றுவிடுகிற விடுதலைப் போராட்டங்கள், புதிய பாடங்களைக் கற்றுத் தரும் ஆசான்களாகவும் மாறிவிடுகின்றன.

திராவிடரின் சகல நலன்களும் இணைந்த, மானத்தோடு கூடிய நீடித்த நல்வாழ்விற்காக, விடுதலை கோரும் நமக்கு. நம் கண்முன்னால்—நம் வாழ்நாளில், அடிமை விலங்கொடித்த நாடுகளைக் காணும் போது புதிய நம்பிக்கையும், தெம்பும் பிறக்கத்தான் செய்கின்றன.

நமது சுதந்திரத் தாகத்தை மிகுவிக்கும் வன்மை பெற்ற வீரம் செறிந்த விடுதலைப் போராட்ட வரலாறுகள், நமது பகைவர்களுக்குத் தக்கதோர் பாடம் புகட்டுவனவுமாகும்.

ஆட்டத்தில் எத்தனைதான் தோற்றாலும் கொஞ்சமும் கவலைப்படாதிருக்கும் பெயர்போன சூதாடியைப்போல விளங்கிக்கொண்டிருக்கும் தென்னாட்டு அரசியல்வாதிகளுக்கு—குறிப்பாக, 'கனம் காமராசர்'களுக்கு, நாட்டுப் பற்று ஊட்டவும் அந்த வரலாறுகள் பயன்பட முடியும்.

அத்தகு வரலாற்றை சிருஷ்டித்திருக்கும் நாடுதான் மொராக்கோ—வடஆப்பிரிக்காவில் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் காலனிகளுள் ஒன்றாக இருந்து, இந்த ஆண்டுத் துவக்கத்தில் விடுதலை பெற்ற நாடு!

மொராக்கோ அடிமைப்பட்ட வரலாறே மிகவும் வேதனை கலந்த ஒன்றாகும்.

பிரான்ஸ் நாட்டை 14-ம் லூயி என்ற மன்னன் ஆண்டுக்கொண்டிருந்தகாலம்; மொராக்கோவில், இஸ்மெயில் என்பவன் மன்னனாக வீற்றிருந்தான்.

காம வெறியனான அவனுக்கு 549 மனைவிகள்! 550-வது மனைவியாக 14-ம் லூயி மன்னனின் மகளை மணக்க விரும்புகிறான்; லூயி மன்னனின் தூதுவன் மூலம் தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறான்; லூயி மறுத்துவிடுகிறான்!

அப்போதே லூயி மன்னனுக்கும்—அந்த நாட்டுப் பிரபுக்களுக்கும் மொராக்கோ மீது ஒரு 'கண்' விழுகிறது!

இஸ்மெயில், தனது 549 மனைவிகள் மூலமாயும் பெற்ற 800 ஆண் பிள்ளைகளை விட்டுவிட்டு இறந்துபடுகிறான். பெண் குழந்தைகள் என்றாலே அவனுக்குப் பிடிக்காதாம்! எப்படி? பெண் குழந்தை பிறந்தால், பிறந்த மறுகணமே கழுத்தை நெறித்துக்கொன்றுவிட வேண்டும் என்பது அவன் உத்தரவாம்! அவன்தான் 549 பெண்களை மனைவிகளாகப் பெற்றிருந்திருக்கிறான்! விசித்திரமான பிறவி! விந்தையான உள்ளம் கொண்டவன்!

இஸ்மெயில் இறந்துபட்டதும், பட்டத்திற்கு வர, 800 குலக்கொழுந்துகளும் அடித்துக்கொண்டனவாம்! விளைவு—ஒரு நூற்றாண்டிற்கு மேலாகவே நாட்டில் குழப்பம் நீடித்துக்கொண்டிருந்திருக்கிறது. 'எவர் பட்டத்திற்கு உரியவர்?' என்பதை நிர்ணயம் செய்வதில்தான் குழப்பம்!

இந்தக் குழப்பத்தில் மூழ்கிவிட்டிருந்த மொராக்கோ, பொதுவாகவே பத்தொன்பதாம் நூற்றாண்டுத் துவக்கத்தில் ஆப்பிரிக்கா முழுவதையும் கபளீகரம் செய்துவிடுவதில் முனைந்து நின்ற பிரிட்டிஷ்—பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் கண்களை உறுத்தத் துவங்கிற்று.

பிரெஞ்சு மன்னன் மகளை 550-வது மனைவியாக மணம் முடித்துக் தருமாறு இஸ்மெயில் கேட்டதைப் புகலாகக் கொண்டு, பிரிட்டனின் சம்மதத்தை ஒப்பந்தம் ஒன்றின்மூலம் மொராக்கோவினுள் நுழைந்தனர், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள்! அதே நேரத்தில் பிரிட்டன், எகிப்தை அடிமை கொண்டது!

1912-ம் ஆண்டில், மொராக்கோ சுல்தான் ஒருவர், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் பாதங்களில், மொராக்கோவை இறுகப் பிணைக்கும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார்.

இது, மொராக்கோ அடிமைப்பட்ட வரலாற்றுச் சுருக்கம்!

அடிமை கொண்ட மொராக்கோ மக்களை—'தாங்கள், ஆட்சிப் பொறுப்பேற்றிருப்பது வெகு நியாயமான காரணத்திற்குத்தான்; மொராக்கோ மக்களின் நன்மைக்குத்தான்'—என்று கூறி, தம் ஆதிக்க வயப்படுத்த பிரெஞ்சுக்காரர் முயன்றனர்!

இந்தோ-சீனாவிலும், அல்ஜீரியாவிலும், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் ஆதிபத்தியத்தை நிலை நாட்டிய பிரெஞ்சு 'சாம்ராஜ்ய கர்த்தர்'களுள் ஒருவரான ஜெனரல் ஹியூபர்ட் லாய தே என்பான் தான், துவக்கக் காலத்தில் மொராக்கோ மக்களை 'திருப்திப்படுத்த' முயன்றவன் 13 ஆண்டுகள் முயற்சித்து, பிரெஞ்சு ஆதிக்கத்தை வலுப்படுத்திவிட்டு வந்தான்.

மொராக்கோவில் குடியேறி, அந்த நாட்டு உடைமைகளைத் தமதாக்கிக்கொண்டு, வளங்களைக் கொள்ளையிட்டு, மக்களின் உழைப்பைத் திருடி, சுரண்டிக் கொழுக்க முற்பட்ட பிரெஞ்சுப் பிரபுக்களின் எண்ணிக்கை, 1920-ல், 51,000 ஆக இருந்து, 1936-ல், 1,50,000 ஆக உயர்ந்தது.

சுதந்திரம்—சமத்துவம் சகோதரத்துவம் என்ற மயக்கந்தரும் கோஷங்களை உலகுக்குக் கற்றுத் தந்தவர்கள், தங்களை அடிமை கொண்டு, தங்கள் சுதந்திரத்தைப் பறித்து, தங்களைச் சமமான மக்களாக மதிக்க மறுத்து, நாகரீகமற்றவர்கள் என்று ஏசிக்கொண்டு பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் வாழ்வைச் சூறையாடுவதை மொராக்கோ மக்கள் சிறிது சிறி

முகவை ஆர். எஸ். பாண்டியன்

தாக உணரத் தலைப்பட்டனர்

உழைத்துச் சம்பாதிக்க வேலை உண்ண உணவு, இருப்பிடம், உல்லாசமாகப் பொழுதுபோக்கச் சோலைகள், நல்ல சாலைகள், உடல் நலக் குறைவைச் சரி செய்ய மருத்துவ வசதி—இன்னும் எத்தனையோ தந்தனர் பிரெஞ்சுக்காரர்கள்! அத்தோடு, சுதந்திரத்தின் பெருமை பாடும் வால்டேரின் இலக்கியங்களையும் தந்தனர்; ஆனால், மொராக்கோ மக்கள் விரும்பிய அரசியல் விடுதலையை மட்டும் தரமறுத்தனர்!

யுத்தம் மூண்டது! பிரெஞ்சுக்காரர்கள், சுதந்திரம் வழங்க மறுத்ததற்கு அதனைக் காரணமாகக்காட்ட முயற்சித்தனர்!

1943-ம் ஆண்டு! இரண்டாம் உலக யுத்தம் முடியுந்தறுவாயிலிருக்கிறது என்பதைத் திடமாக எவரும் நம்ப இயலாதிருந்த நேரம்!

கசபிளாங்கா நகரில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொண்ட அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அவர்கள், மொராக்கோ சுல்தானாக இருந்த சிதிமுகம்மது பென் யூசுப் என்பாரை விருந்துக்கு அழைத்தார்; 'பிரான்சு ஆதிக்கம் அழிந்துபடுகிறது; உங்கள் நாட்டைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்; நாங்கள் உதவுகிறோம், அதற்கு!'—என்று, ரூஸ்வெல்ட், யூசுபிடம் தெரிவித்ததாகச் செய்திகள் வந்தன.

நாற்பதுக்கு மேற்பட்ட வென்னாட்டிகள்—60-க்கு மேற்பட்ட மோட்டார் கார்கள்—பொழுதுபோக்கிற்காக மாலையில் டென்னிஸ் விளையாட்டு......!—இப்படி வாழ்ந்துவந்த சிதி முகம்மது பென யூசப், சுகபோகங்களில் புரண்டுகொண்டிருந்தாலும், நாட்டுப் பற்றுக்கொண்டவராக விளங்கியதுதான் ஆச்சரியத்திற்குரியது,

யுத்த பிற்காலத்தில! மொராக்கோ மக்களின் தேசிய உணர்வுகளின் உடலாக, புதிய சுதந்திரக் கட்சி (இஸ்திக் லால்) உதயமாயிற்று. இந்தக் கட்சியினர் தங்கள் மன்னர் யூசுப்மீது அபார நம்பிக்கை வைத்தனர்.

இப்போது, இன்னொன்றையும் சொல்லிவிட வேண்டும்; மொராக்கோவின் மிகப் பெரும் பகுதிதான் பிரெஞ்சுக்காரர் வசமிருந்தது. ஒரு சிறுபகுதி ஸ்பெயின் நாட்டவர் வசமும் (ஸ்பானிஷ் மொராக்கோ) மற்றொரு மிகச் சிறு நிலப்பகுதி அமெரிக்கா—பிரிட்டன் முதலிய ஒன்பது நாடுகள் வசமும் ('டாஞ்சியர் பகுதி) இருந்துவந்தன.

இஸ்திக் லால் கட்சியினர், மொராக்கோ மக்களின் தேசிய அபிலாஷைகளை—விடுதலை வேட்கையை அமைதியான பல வழிகளிலும் எடுத்துரைத்து வந்தனர். ஆனால், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளோ, வழக்கம் போல கேளாக் காதினராகவே இருந்தனர்.

1947-ல் ஓர் நாள்! சுல்தான் பென்யூசுப், டாஞ்சியரில் கூட்டம் ஒன்றில் பேசுவதாயிருந்தது; அவர் பேசுவதற்காகத் தயாரித்து வைத்திருந்த சொற்பொழிவின் இடையில் செருகிக்கொள்ளுமாறு, 'ஒரு பத்தி'விஷயம் எழுதித்தந்தனர் பிரஞ்சுஆதிக்கபுரியினர்! 'குறிப்பாக, சுதந்திர விரும்பிகளான பிரான்ஸ் நாட்டவரைப் பாருங்கள்......' என்று துவங்கிச் செல்கிறது, அந்தப்பத்தி!

ஆனால், பரிதாபம்! பென்யூசுப் சொற்பொழிவை நிகழ்த்தும் போது, இந்தப் 'பத்தி'யை ஒதுக்கிவிட்டே பேசினார்! பிரெஞ்சுக்காரர்கள் முகத்தில் அறைந்தாற்போலாயிற்று, இந்தச் சம்பவம்!

அவமானம் தாங்க முடியாத ஆதிபத்தியவாதிகள், ஆத்திரப்பட்டனர்! சினந்தனர்! சீறினர்!

சுல்தானுக்குப் பாடம் கற்பிக்க எண்ணி, ஏகாதிபத்திய வெறி கொண்ட அல்போன்ஸ் ஜுயின் என்பானைப் புதிய 'ரெசிடெண்ட்-ஜெனரலாக' மொராக்கோவில் நியமித்தனர். இந்த மார்ஷல் ஜுயின், 'மாரக்கேஷ்' என்ற மலைப் பகுதியின் பாட்சாவான ஹாத்ஜ்தாமி எல்கினாழய் என்ற 80 வயதுக் கிழவரை சுல்தான் பென்யூசுபிற்கு எதிராகத் தூண்டிவிட்டான்.

மொராக்கோ மக்களில் பெரும் பகுதியினரான அராபியரிலிருந்து, சிறிதளவு மட்டுமே பண்பிலும், பழக்கத்திலும், கடவுள் வணக்கத்திலும் மாறுபட்ட 'பெர்பர்'கள் என்றழைக்கப்படும் மக்களின் தலைவனாகக் கருதப்படுவர்தான் மாரக்கேஷ் பாட்சா! இப்போது பிரித்தாளும சூழ்ச்சியில் வெற்றி பெற்றுவிட நினைத்தது பிரான்ஸ்! அராபியருக்கு எதிராக, 'பெர்பர்'களை மூட்டிவிட்டு, இந்தப் பகைத்தீயில் குளிர்காய நினைத்தனர்!

ஆனால்......!

மாரகேஷ் பாட்சாகூட ஒரு விசித்திரமான மனிதர்; இன்றும், உலகத்தில வாழும் பெரும் பணக்காரர்களில ஒருவர்! பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான சுரங்கங்கள், தொழிற்சாலைகள் இவற்றின் பங்குதாரர்; மாரக்கேஷ் பகுதியில் இறக்குமதியாகும் மோட்டார்கார் போன்ற பொருள்களுக்குச் 'சுங்கம்' விதிக்கும் அதிகாரம படைத்தவர்.

(8-ம் பக்கம் பார்க்க.)

ஒரு நாடு தன் சுதந்திரத்தை விட வாழ்க்கை வசதிகளையோ, பணத்தையோ அதிகமாக மதிக்குமானால், அது தன்சுதந்திரத்தையும இழந்துவிடும். வாழ்க்கை வசதிகளையும், பணத்தையும் இழந்துவிடும்.

—சாமர் செட்மாம்

செந்தமிழ் நாடு, சிந்தைக்கு இனிய நாடுதான்; எல்லா வளமும் பொங்கிடும் நாடு தான். வரலாற்றுச் சுவடியில் நல்லிடம் பெற்றுள்ள நாடுதான்; ஆனால், வந்த எல்லார்க்கும் இடம் கொடுத்து ஏமாந்த நாடு தான்.

—அண்ணா

வெற்றிகளைவிட வெற்றி மிகுந்த தோல்விகளும் சில இருக்கின்றன. சில வேளைகளில், வெற்றிகளைப் பெறுவதைவிட, அத்தகையத் தோல்விகளைப் பெறுவதே சாலச் சிறந்ததாக அமைகிறது.

—காண்டேகர்

புதிய 'இராசபார்ட்'—பழைய நோட்டீஸ்!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தைரியமில்லாமல், இந்தச் சூரப் புலிகள் பிடித்து அந்தச் செந்தலைப் புலிகளிடம் ஒப்படைப்பார்களாம்! இப்படி கையாண்டி செய்திருக்கின் றார்கள்

நல்லவேளை — 'போலீஸ்காரர்களைப் பிடித்துக் கலகம் செய்பவர்களிடம் ஒப்படைப்போம்,' என்று சொல்லாமல் போனார்களே என்று சந்தோஷப்படுகிறோம்!

இதுதான் இன்றைய அரசியல் 'குரல் கொடுக்காதே; சிரம் வெட்டுவேன்'—என்று சொன்ன விருதுப்பட்டி வீரர் புதிய 'இராசபார்ட்!'—பழைய நோட்டீஸைப் படிக்கிறார்!

நம் நாடு நமக்கல்ல!

நம்நாடு நமக்கல்லவாம். நம்நாடு தமிழ்நாடு, தமிழகம் — இவை போன்ற பெயர்கள் எல்லாம் அவருக்கு எட்டிக்காய்; நமக்கோ வெல்லக்கட்டி! எனினும், அவர் தம்மைத் தமிழரென்கிறார். என்னவும் சந்தேகம் நமக்கில்லை— அவர் தோற்றத்தைக் காணும் போது! அதனாலேயே அவரை ஆட்சித் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கின்றது, நாடு! வேறு தலைவர்களுக்குப் பஞ்சம் என்பதால் அல்ல—பதவிப் பந்தயத்தில் முன் வரிசையில் வந்தார் என்பதால்!

அரசியல் எனும் அக்னிக் குண்டத்தை வளர்த்து, அதில், அடி முதல் முடிவரையில் மூழ்கி எழுந்தவர் என்பதால் அல்ல! கண்டை அடிக்கத் தடிதூக்கி, தடிபடி காசு தின் மேல் விழ, கண்டு தப்பித்து வளையில் புகுந்து விட்டதைப் போன்ற நிலையில் வந்தவர், காமராசர்!

அரசியலும் தெரியாமல், தமிழும் தெரியாமல், தமிழர்களையும் அறியாமல், தமிழர் உணர்ச்சியையும் புரியாமல் தமிழ் நாட்டை ஆளவேண்டுமென நினைப்பவருக்குப் பழைய நாடக நோட்டீஸ் நினைவுதான் வந்திருக்கிறது! அதைத்தான் இன்னும் கையில் வைத்துக்கொண்டு போன இடமெல்லாம் படித்துக் காட்டுகிறார்.

ஆனால் அந்தக் காலத்திற்கும் இந்தக் காலத்திற்கும் உள்ள வித்தியாசம்—அந்தக் காலத்தில், கம்பெனியில் விளம்பரத்துக்காக இருப்பவன் தெருத் தெருவாகப் படித்துக் காட்டிக்கொண்டு வருவான்; இந்தக் காலத்தில் 'இராசபார்ட்' போட்டிருக்கும் இவரே படித்துக் காட்டிக்கொண்டு வருகின்றார்!

'ஆ! ஆ! எவ்வளவு எளிய தன்மை! ஒரு சாதாரணமானவன் செய்யக்கூடிய வேலையை, இந்தப் பெரிய ஒரு 'இராசபார்ட்' அல்லவா செய்கிறது?'—இப்படியும் பேசுவார்கள் அல்லவா மக்கள்? அதுவும் ஒரு இலாபந்தானே!

நாடகம்: கபிலையார் சவாரிகள்' — 'விரிவான விளக்கத்தை விரைவில் எதிர்பாருங்கள்,' என்று முரசறைகிறார்!

அதற்காகவேதான் நாமும் திருச்சியிலே கூடினோம். ஏன் தெரியுமா? அந்த சோழப் பெருமரின் மடியிலேதான் பெரிய மலையிருக்கிறது! நமது பேரிகையின் சத்தம் அந்த மலையில் மோதி, அதிலிருந்து கிளம்பும் எதிரொலி, மாதா நாடெனும் மதியற்ற மந்திரிகள் கூடாரத்தில் கேட்கட்டும் என்பதற்காக!

அவரும் நாடக விளம்பரத்தைத் தொடங்கிவிட்டார்; நாமும் அந்த நாடக கண்ணுள எதிர்பார்ப்போமாக!

சுதந்திரம்! அது இல்லாத போது, நிலம்—நீர், ஆள்—அம்பு, சிறப்பு—செல்வாக்கு எது இருந்து என்ன பயன்? சுதந்திரம்தான் மனிதனின் முதல் தேவை.

—எமர்சன்

கலைப் பாதையில் நடப்போம்!

தில்லை-வில்லாளன்

★

'திருச்சி, ஒரு திருப்பு முனை' என்றோம்; 'திருப்பு முனைதான்' என்று திராவிடம் ஏற்றுக்கொண்டு விட்டது!

அரசியல் துறையில், 'பக்க வாத்திய' நிலையிலிருந்து 'பாக வதராகி'யிருக்கிறோம். நீண்ட நாட்களாகத் தென்னகத்தின் மக்கள், 'நம் குரல் இனிமையானது; தனித்து இசை விருந்து நிகழ்த்தலாமே' என்று கூறிவந்தனர். அவர்கள் பேச்சை மெய்ப்பிப்பது என முடிவு செய்துவிட்டோம். வரும் பொதுத் தேர்தலில் கழகம் நேரடியாக நிற்குமென உறுதியாகத் திராவிடத்திற்கு அறிவித்து விட்டோம்.

இந்தப் புதிய போர்முறைமூலம், நமது அரசியல், பொருளாதார, சமுதாயக் கொள்கை, குறிக்கோள்களை நிறைவேற்றுவது என்று முடிவு செய்திருக்கிறோம். இது திருப்பு முனைதானே!

இந்தத் திருப்பு முனையை நான் கூறவரவில்லை. இந்த மாநில மாநாட்டில், கலைப் பேச்சுக்கள் நடைபெற ஒரு மாபெரும் பந்தல் போடப்பட்டிருந்தது; அது போலவே, இரவு, கலை நிகழ்ச்சிகள் நடைபெற அம்மேடையின் பின் பக்கமும் ஒரு திறந்த வெளி அரங்கு அமைக்கப்பட்டிருந்தது இதுகூட, கழகத்தின் திருப்பு முனைகளில் ஒன்று என்பேன்!

கழகத்திற்கும், கலைத்துறைக்குமுள்ள தொடர்பு பற்றி வியந்து கூறுவார் உண்டு—தூய உள்ளத்தோடு தொலைவில் நிற்பவர்கள் அவர்கள்!

மகிழ்ந்து கூறுவார் உண்டு—அவர்கள் நல்லெண்ணத்தோடு நாளும் நம்மைச் சந்திப்பவர்கள்!

இகழ்ந்து கூறுவார் இருக்கின்றனர்—அவர்கள் 'வயிறெரிந்தான்' கட்சிக்காரர்கள்!

கழகம் கண்ட நாளிலிருந்து கலை மூலம் நாம் கண்ட பலன்கள் அதிகம். கழகம் வளர்ந்து ஒரு பெருமண்டபமாக நிற்கிறதென்றால், அதனைத் தாங்கி நிற்கும் தூண்களில் வலுவானவை, 'கலைத் தூண்கள்' என்றுகூடக் கூறுவேன்!

கலைத் துறையை நம்மை விட்டுப் பிரித்துவிட எவ்வளவோ முயன்றனர்—தோற்றனர்!

கலைத் துறைக்கும், கழகத்திற்கும் உள்ள தொடர்பு, நம் மாநில மாநாட்டுப் பந்தல் அமைப்புக்கும், நாடகவெளி அமைப்புக்கும் உள்ள தொடர்பு போன்றதுதான் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை; ஏனெனில், அவர்கள் அரைத்துப் பச்சைகள்!

கலைத் துறையில் நாம் கவனம் அதிகம் காட்டக் காட்ட, 'காசு பணம்' தேடுகிறார்கள் என்றார்கள்; அவர்கள் என்னமோ, தினமும் 'காசு பணத்தை', காலணா, அரையணா, ஓரணாவாக மாற்றித் தெருவிலே இறைத்துக் கொண்டிருப்பதைப்போல—உம்; அவர்கள் எப்படியோ போகிறார்கள் — நல்லவர்கள்!

> வீரம் ததும்பும் வாலிபர்களின் உணர்ச்சிச் செல்வம் இருக்கிறதே, அது வெள்ளத்தால் அழியாது; வெந்தணலால் வேகாது; கொடுத்தாலும் நிறைவுறுமே அன்றி ஒருநாளும் குறையாது; அந்தச் செல்வம் நம்மிடம் ஏராளமாக இருக்கிறது.
>
> —அண்ணா

கலை, நமக்கு கருத்தைத் தந்தது; மக்களுக்கு நல்ல பகுத்தறிவைத் தந்தது; கழகத்திற்கு—கழகத்தினருக்குப் பணமும் தந்தது; கழகத்திற்கு வளர்ச்சியைத் தந்தது!

அந்தக் கலைத் துறையில் நாம் கடைசிவரை போகவேண்டும் என்பதே, என் அவா—அதனை வெளியிடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

கட்டணமில்லா திறந்த வெளி நாடகங்கள் நாடெங்கும் நடைபெற வேண்டும்! புரட்சிக் கருத்துகளைத் தாங்கிடும் புதுப் புதுக் கதைகள் நாடகங்களாக நடிக்கப் பெறுதல் வேண்டும்! 'நாடகம்' என்பதைவிட, இவைகளை, 'கூத்து' என்பதே பொருந்தும். இந்தத் துறையில் மிகப் பிரபல்யமடைந்த கலைவாணர்கள் ஈடுபட வேண்டியதில்லை; வளரும் நிலையிலுள்ள நண்பர்கள் இந்தத் துறையில் ஈடுபட்டால், மிக எளிதில்—விரைவில், பாமர மக்களிடையே பகுத்தறிவு ஒளிபரப்ப இயலும் என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயமாகும்.

கழகம், தேர்தலில் ஈடுபடுகிற இந்த நேரத்தில், இந்தக் 'கூத்து' முயற்சி மிகுந்த பலன்தரும். கிராமப் புறங்களில், இம்மாதிரி கூத்துகள் இடம்பெற இடம்பெற, மக்கள் மனதிலே நாம் இடம் பெறுவோம். மக்கள் மனதிலே நாம் இடம் பெற்றுவிட்டால், மக்கள் ஆளும் அவைகளில் நாம் இடம் பெறுவோம் என்பது உறுதி.

இசைத் துறையில், இன்னமும் நாம், நாடகத் துறையில் கவனம் செலுத்திய அளவு கவனம் செலுத்தவில்லை. கழகப் பாடல்கள் பாடுவதையே இசை நிகழ்ச்சியாக வைத்திருக்கிறோம். மற்ற இசைவாணர்கள் ஆண்டவன் மீதும், அவசியமற்றதின் மீதும் பாடல்கள் பாடுவதுபோல், நாம் நாட்டின் மீதும், நாட்டுநிலை மீதும் பாடல்கள் பாடிடும் இசை நிகழ்ச்சிகள் நடத்துதல் வேண்டும். 'சித்தூரும்', 'மகாராஜபுரமும்', 'செம்மங்குடியும்', 'அரியக்குடியும்' போய், 'நாகூரும்', 'மதுரையும்', 'சென்னையும்'—என்று பெயர் மாறுகிற அளவு இசை ஞானமிக்க பகுத்தறிவுக் கச்சேரிகள் இடம் பெறுதல் வேண்டும்.

காலட்சேப முறையில், நாம் இன்னமும் சிறந்த முறையில் முயற்சியெடுக்கவில்லை. இம்முறை மிக்கப்பலனளிக்கும் என்பது 'கிந்தனார்' நமக்குத் தரும் சான்றாகும்.

பொம்மலாட்டம் முறையிலும், நாம், நமது புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட கதாபாத்திரங்களை வைத்துப் பொம்மலாட்டம் நடத்தலாம்.

நாட்டியத் துறையில் நாம் இன்னமும் பரீட்சை செய்துகூடப் பார்க்கவில்லை.

சித்திரம், சிற்பம் இவை மூலம் கருத்துரை பரப்பும் முறை நம்மால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. சென்ற மாநில மாநாட்டில் நாம் வைத்த கலைக் கண்காட்சி, இந்த மாநில மாநாட்டில் இரண்டு பங்காக வளர்ந்துவிட்டது. விஞ்ஞான விந்தைகளையெல்லாம் செய்துகாட்டி இருந்தோம், தி. மு. கழக மாணவர் கிளையின் மூலம்!

இப்படி, கலை மூலம் கருத்து பரப்பும் வேலை மிகவும் வேகமாகவும், விதவிதமாகவும், பரவலாகவும், கவர்ச்சிகரமாகவும் ஏன் நடைபெற வேண்டுமென்றால், கழகம் தேர்தலில் இறங்குகிறது. கழகத்தவா, வாக்காளரின் உள்ளத்திலே நிலையான இடம் பெற்றாக வேண்டும் என்ற நிலை வந்துவிட்டது துண்டு துண்டான காரியங்களால் இதனைச் சாதிக்க முடியாது. 'கலைதான் இதற்கேற்ற கருவி' என்பது திட்டவட்டமான முடிவாகும்.

'கலை மூலம் நம் கழகக் கருத்துக்களைப் புகுத்தலாம்' என்ற நிலை, அறிஞர் அண்ணாவால் துவக்கி வைக்கப்பட்டது. நண்பர் கருணாநிதி போன்றோரால் பின்பற்றப்பட்டு உச்சநிலைக்குப் போயிருக்கிறது. இந்த நிலையால் மேலும் கழகம் வளர வழிவேண்டும்.

இது பழையமுறை — உலக முறை.

சிற்பத்தின் மூலமே புத்த மதம் பரவிற்று—சைன மதம் வளர்ந்தது.

கலைத் திறன்கொண்ட கட்டிடங்களே, இஸ்லாத்தை இன்னமும் நினைவிற்குக் கொண்டுவருகின்றன

நீண்டு உயர்ந்த கிறித்தவ ஆலயங்களே, ஏசுவை நினைவிற்குக் கொண்டுவருகின்றன.

தேவாரம், திருவாசகம் பாடியே சைவம் வளர முடிந்தது.

பிரபந்தம், பாவை பாடியே வைணவம் தழைக்க முடிந்தது.

நாடக, கூத்துக்களில் இராமனையும் கிருஷ்ணனையும் காட்டியே, இந்து மதத்தை அசையாத நச்சு மரமாக வளர்த்துவிட்டனர்.

ஐரோப்பிய நாடுகளில், கால மறுமலர்ச்சியைக் காட்டியவையே நாடகங்கள் என்பர்.

போப்பாண்டவரை எதிர்த்துப் பிரச்சாரம்—மன்னரை எதிர்த்து முடியாட்சி ஒழிப்புப் பிரச்சாரம் சிலைகளில் எழுதப்பட்ட கேலிச் சித்திரங்கள் மூலம் நடைபெற்றன —ஐரோப்பிய நாடுகளில்—எனப் படிக்கிறோம்.

பேனா, வாளைவிட வலிமை வாய்ந்தது என்று கூறுவார்கள். இதனை உலக வரலாறு, பருவத்திற்குப் பருவம் மெய்ப்பித்துக் காட்டிக்கொண்டே வருகிறது சாக்ரடீஸ் காலத்திலிருந்து காந்தியார்வரை பார்க்கிறோம், வால்டேரையும், ரூசோவையும், பிரெஞ்சுப் புரட்சியையும் படித்தவர்கள்தாம் நாம்!

ஆனால், நூற்றுக்குப் பதினைந்து பேர் மட்டுமே படித்தவர் உள்ள இந்த நாட்டில், ஏட்டின் மூலம் எண்ணத்தைப் புகுத்துவது இயலாத காரியம். பார்வையால் படிப்பு (Visual Education) தான் இங்கு எளிதில் நடைபெறும்.

மேலும் நாம் சுயமரியாதைக் கருத்துக்களைப் புகுத்தி, மௌடீகத்தின் அடிப்படையில் நடத்தப்படும் எல்லாவித கலை நிகழ்ச்சிகளையும், கேளிக்கைகளையும், விழாக்களையும் கண்டிக்கிறோம் நம்மைப் பின்பற்றுவோருக்கென என்ன கலை நிகழ்ச்சிகளைத் தந்திருக்கிறோம்? யோசித்துப் பார்க்க வேண்டும் மனித சுபாவங்களையும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

கலைத் துறையின் எல்லாக் கிளைகளிலும் நாம் நமது கவனத்தையும் முயற்சியையும் திருப்பி, மக்களிடம் நாட்டு உணர்ச்சியும், மொழி உணர்ச்சியும், தனியாட்சி வேட்கையும் எழ, வழிசெய்ய வேண்டும்.

இந்தக் கலைப் பணியில், திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் ஈடுபடலாம். ஏனெனில், அவர்களுக்கு ஆண்டுதோறும் ஓய்வு கிடைக்கிறது குடும்பப் பொறுப்பும் அற்றநிலையிருக்கிறது. இதற்கு முன்னால் அவர்களுக்குப் பேச்சுப் பயிற்சி தரப்பட்டு, நாடு முழுவதும் பிரச்சாரம் செய்ய அனுப்பப்பட்டது போல், கூத்துக்கள் கற்பிக்கப்பட்டு, காலட்சேபங்கள் கற்பிக்கப்பட்டு, நகரங்களுக்கல்ல—கிராமங்களுக்கு அனுப்பினால் நல்ல பலன் கிடைக்கும்.

சாக்ரடீஸ் விஷம் அருந்திய வரலாற்றை நாடகமாக நடித்துக் காட்டலாம் காலட்சேபமாக — பாட்டு, பேச்சு மூலமும் தெரிவிக்கலாம் பேச்சைவிட இம்முறையில் அதிக பலன் உண்டு இப்படிப் பிரச்சாரம் நடைபெற மாணவர்கள், முன்வர வேண்டும்.

நாம் தேர்தலில் நிற்கிறோம் என்றவுடன், ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் உள்ளத்தில் அச்சம் தலையெடுத்துவிட்டது அச்சத்தின் விளைவாக உளறுகிறார்கள் — குளறுகிறார்கள். ஆகவே, நாம் மக்களைச் சந்திப்போம்; அதுவும், கலைப் பாதையில் நடந்து—என்கிறேன்.

> தேரும்—திருவிழாவும், கும்பாபிஷேகமும்—மகாமகமும் ஊர்மக்களின் கவனத்தைக் கவருகின்றன—உண்மை. ஆனால், அவற்றால் ஏதாவது பயன் விளைகிறதா? ஒழுக்கம் வளருகிறதா? சன்மார்க்கம் தழைக்கிறதா? இல்லையே! ஏன்?
>
> —அண்ணா



திராவிடரின் கைவண்ணம்—மாயூரம் தோழர்கள் அமைத்த தென்னந்தீற்று முகப்பு—மாநில மாநாட்டு இரண்டாம் நுழைவுவாயில்!



கோட்டை கட்டி வாழ்ந்தோம்! கோடி சட்டி ஆண்டோம்!—என்பதை நினைவூட்டும், திருச்சி மாநில மாநாட்டு முகப்பு!

வாழ்க, நம் நாடு!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

—நாமோ, அவர்களுக்குச் 'சிறிய கழக'மாகத் தோன்றுகிறோம். 'குறள், வடிவில் சிறியதுதான்; ஆனால் அதன் குரல் மிகப் பெரியதன்றோ?'—எனப் பாராட்டுகின்றனர், நம் போராட்டத்தை வரவேற்போர்!

'அது உண்மைதான்' என்பதுபோல், அகில இந்திய இயக்கத்திற்கு, நம்மை வீழ்த்த ஒரு 'வினோபா' தேவைப்படுகிறார்; இல்லை;—ஒரு மகான் தேவைப்படுகிறார். அவருக்கு முழத்துண்டு தேவைப்படுகிறது—உண்ணா நோன்பும் தேவைப்படுகிறது. அந்த 'எளியவர்' மாநாட்டைச் சிறப்பிக்க வருகை தரும் இராசேந்திரருக்குப் பத்தாயிரம் ரூபாயில் குளிர்ச்சி அறை தேவைப்படுகிறது—இரண்டுநாள் விழாவுக்கு!

வங்கக் கடலை குறுக்கே கிழித்துச்சென்ற இராசேந்திரன் ஆண்ட தரணி—வடநாட்டு இராசேந்திரருக்கு அடிமைப் பரணி பாடிக்கொண்டு சாகிறது!

சாவதா — வாழ்வதா—ஒரு கை பார்த்துவிடுவோம என்றுதான், 'ஏழு வயதே, எழிற் கருங் கண்மலர்' கொண்ட கழகம், வேலெடுத்துச் சூளுரைக்கிறது!

சூளுரைப்போர் சுயமரியாதைக்காரரன்றோ—நாத் தழும்பேறிய நாத்திகரன்றோ—என போதை கொண்டு கூச்சலிடுகின்றனர், புத்தர் விழாவில்—தமிழ்ச் சங்கப் பொன் விழாவில்! இவர்கள் புத்தரை அறியார் — தமிழை அறியார்—இத்தரை மீதினில், புதுதமுதென நற்கருத்துக்கள் பொழிய வேண்டிய அவசியம் அறியார்!

அவர் அறிய—அவனி அறிய—
வடவரிடமிருந்து திராவிடம்
பிரிய—வந்துவிட்டது போர்
என்றே தோள்தட்டி ஆடுவோம!

களச்சிந்து பாடி அனைவருமே
வாள் எடுத்துக் கூடுவோம்!
தாள் பிடித்து வாழ்பவர்கள்
தலைகுனிந்து மாளட்டும்!
கோல் பிடித்து ஆள்பவர்கள்
குலை நடுங்கி ஓடட்டும்!

நமக்கு வயது ஏழு! 'நம் நாட்டு'க்கு வயது நாலு!—
அல்ல! அல்ல!! நாம்தான் உலகில் மூத்தவர்கள்!

'நம் நாடே' முதல் நாடு!
நமது விடுதலைப்படையின் பாடி வீடு! கொள்கைத் தேன் கூடு!

வாழ்க, நம் நாடு!

வாழ்க, நம் குடும்பம்!!

வாழ்க, நம் மூத்தோன்!!!

பண்டிதர் பயணம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கப்பூர் ...றிலே இருக் கும் கடற்படை... இந்த வட்டா ரத்தையே பிரி...டிஷ் ஆதிக்கத் தில் வைத்திரு...கிறது; செஞ் சீனவை, இ...தா - சீனவின எல்லையிலேயே... வைத்திருக் கிறது. இப்ப...ப்பட்ட சாம ராஜ்யாதிபதிய...ன இடத்தை விட்டு விட்... போகச் சொன் னல், போ...ண்ணம் வருமா? ஆகவேதான்... உலக சமாதா னத்தையும், ...ஜனநாயக வாழ்க் கையையும் ...ழுத்துப்போட்டு, 'சப்பை' வ...ங்களைச் சொல்லி வருகின்றன... பிரிட்டிஷார்! ஆனல், கா...ம் மாறியது என் பதை உ...ம் அவர்களுக்கு எடுத்துச் ...சால்ல வேண்டும்.

சைப்ர... விஷயத்திலோ, இதைவிட... இன்னும் தெளிவா கவே ஈட... பேசியிருக்கிருர்— 'சைப்ர...ல்லை; இல்லையேல், எண் ணெய்... எண்ணெய் இல்லையே... பிரிட்டனில் வேலை யில்லாத்... திண்டாட்டம்தான்!' என்று... சென்ற வாரம் பேசி இருக்... ரர்.

... வாதத்தின் அர்த்தம் இ... நகைப்பைத் தருகிறது. நமத... ட்டனில் வேலையிலலாத் திண்டாட்டமும், வறுமையும ஏற்பட வேண்டுமென்று யாரும் கூறவில்லை; ஆனல், அதைத் தவிர்க்க, சைபரஸ் அடிமைப்பட்ட நாடாகவே இருக்கவேண்டுமா? சைப்ரஸ் தீவின் சுதந்திரத்தை அபகரித்து வைததிருப்பதின் மூலம்தான் பிரிட்டனில் வாழ்க்கைத்தரம குறையாமலிருக்கு மென்ருல், மனித தர்மத்திற்கு ஒவ்வாத விஷயம் அது; சுயநலத்தின் பாற்பட்டது!

சைப்ரஸ் மக்கள், கூட்டு வரியைக் கட்ட முடியாமல் தவிக்கும்போதும், மககாரியஸ் பாதிரியார் வெளிநாடு சென்று அவதியுறும்போதும், சைப்ரஸ் வாலிபர்கள் குண்டடிபட்டு குருதி வெள்ளத்திலே மிதந்து கிடப்பதைக் கண்டபோதும், இவைகளின் பயனகத்தான் பிரிட்டிஷார் சொகுசான வாழ்க்கையை பெறுகின்றனர் என்று சொன்னல், நமக்குப் பொறுமை தளர்கிறது! பிரிட்டிஷாரின் உயர்ந்த ஜனநாயகத் தத்துவங்கள், வேடிக்கைப் பேச்சாகத் தோன்றுகிறது!

சிங்கப்பூரையும் சைப்ரஸையும் விடக் கொடுமையை அனுபவிக் கும் நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள்; 'கோல்ட் கோஸ்ட்'-ஐப் பற்றி ஆயிரம் கூறினலும்கூட, கெனியாவில் வெள்ளையர் செய்யும் கோரக் கொலைகளுக்கும், தென் ஆப்பிரிக்காவில் கொஞ்சம் கொஞ்சமாக கறுப்பர்களை ஒழிக்கும் முயற்சிகளுக்கும் எந்தவிதமான நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை.

சென்ற சில ஆண்டுகளாக ஆப்பிரிக்காவில் வெள்ளையர் நடத்தும் அட்டூழியங்களைக் கவனிக்கும்போது, ஏதாவதொரு வழி செய்து, பெரும்பாலான ஆப்பிரிக்கர்களை அழிந்து போகச் செய்வதே அவர்களுடைய குறிக்கோளாக இருக்கிறது என்று தெரிகிறது.

மனிதனுக்கு மனிதன் மதிப்பு கொடுத்து, ஒருவர் உரிமையை ஒருவர் பறிக்காத நிலையில் எந்த நாட்டானும எந்த நாட்டிலும் சென்று வாழ்வதைப் பற்றி யாரும் தடை கூறமாட்டார்கள். ஆனல், ஏமாந்தவர்களை எத்திப் பிழைபபதோடல்லாமல், அவர்களை அழித்து, பூராவையும் சுவீகரிக்கும் நெடுமதி கொள்வது மூழ...

மூச்சோடு கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

சிங்கப்பூரிலிருந்து ஜிப்ரால்டர் வரை பிரிட்டிஷ் ஆதிபத்தியம் செய்யும் அநாகரீகமான ஆக்கிரமிப்புச் செய்கைகளைக் கண்டும் வாளாவிருப்பது, மனித பரம்பரையின் முன்னேற்றத்தைத் தடை செய்ததாகும்.

பரம்பரையாக ஆண்டு கொண்டிருந்தாலும், உரியவன் விழித்துக் கொண்டால் மரியாதையாக விலகிக் கொள்வது தான் புத்திசாலித்தனமான முறை.

"பாரம்பரியமாக இருந்துவந்த பல விஷயங்கள் உருத் தெரியாமல் மாறிப்போகும். பிரிட்டிஷாரின் ஆதிபத்தியம் நாளாவட்டத்தில் தேய்ந்து அழிந்து போவதைக் கண்டு ஆங்கிலேயர்கள் மனவருத்தப்படக்கூடாது. உலக ஆதிபத்தியம் பல நூற்ருண்டுகள் நம் கையில் இருந்தது; ஆனல், அதைக் கொண்டு நாம் நல்ல பல காரியங்களை செய்யத் தவறிவிட்டோம். நம்முடைய தலைமையைக் கண்டு கௌரவப்படக் கூடிய பல காரியங்களை செய்யவில்லை. இருந்தாலும் பரவாயில்லை. இப்பொழுதாவது உலகம் மாறிக் கொண்டிருப்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். உலகத்தோடு ஒட்ட ஒழுகி, விருப்பமிருக்கிறதோ, இல்லையோ, உலக மக்கள் எல்லோரும், நாமும் சரிசமானமானவர்கள்தான் என்பதை ஒத்துக் கொள்ளும் மனேபாவம் வர வேண்டும்! இல்லையேல் நாமெல்லோருக்கும் அழிவுதான்!!"

என்று காலஞ்சென்ற பிரிட்டிஷ் பேரறிஞர் வெல்ஸ் கூறியதைத்தான் வெள்ளையர்களுக்கு கவனப்படுத்தவேண்டும. அதற்கு வழி, லண்டன் பயணம் அல்ல! காமன் வெல்த் கூட்டணியிலே இருந்தால் இராணியின் விருந்தும், உபசாரமும், புன்முறுவலும் கிடைக்குமே தவிர மக்களின் விடுதலை கிடைக்காது.

காமன்வெல்த் கூட்டணி, பிரிட்டிஷார் செய்யும் ஆதிபத்திய அடக்குமுறைகளுக்கு நன்கு திரையிடுகிறது.

பிரிட்டிஷார் செய்யும் அக்கிரமங்களை அமெரிக்காவும், ஐரோப்பாவும் கண்டிப்பதில்லை எல்லோருமே ஒரு சார்பினர் என்பது மாத்திரமின்றி, ரஷ்யாவைப் பொது எதிரியாகக் கொண்டிருக்கின்றனர். ரஷ்யா நல்லதைக் கூறினலும் அதில் கம்யூனிச நஞ்சு இருக்கும்! ஆகவே, அதை யாரும ஒத்துக் கொள்ள மறுக்கிருர்கள்.

ஆகவே, இன்றைய உலக நிலையிலே வெள்ளை ஆதிபத்தியங்களின் அக்கிரமங்களை எடுத்துக் கூறி, ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் இன்னும் அடிமைப்பட்டுக் கிடக்கும் நாடுகளை விடுவிக்க வேண்டிய மகத்தான பொறுப்பு, சமீபத்தில் விடுதலைப் பிடியிலிருந்து தப்பித்த இந்தியாவுக்கு இருக்கிறது. உண்மையிலேயே மனித சுதந்திரத்திலே பற்றிருக்குமானல், நேரு பண்டிதரின அயல்நாட்டுக் கொள்கை வேறுவிதமாக இருந்திருக்க வேண்டும.

நமது மாநில மாநாட்டிலே தீர்மானித்தபடி, காமன்வெல்த்திலே இந்தியா இருக்கக் கூடாது; அப்பொழுதுதான், நேரிடையாகப் பிரிட்டிஷாரின் ஆதிபத்திய வெறிச் செயல்களைக் கண்டிக்க முடியும். காமன்வெல்த்திலே இருக்கிற காரணத்தினலேதான், பாண்டூங் மாநாட்டிலே சிங்கப்பூர், மலேயா சுதந்திரத்தைப் பற்றி ஒரு வார்த்தைகூட பேசவில்லை, நேரு பண்டிதர்!

சிங்கப்பூருக்கு வெகு அருகாமையிலே நடந்த பாண்டூங் மாநாட்டிலே, அதன் விடுதலைக் குறித்து பேசப்படவில்லை! ஆனல், ஆருயிரம மைல்களுக்கு அபபால் இருக்கும அல்ஜீரியா பற்றி பேசபபட்டது! இந்த வேடிக்கையான சூழ்நிலைகளுக்குக் காரணம், கொள்கைக்கும —செய்கைக்கும் சம்பந்தமில்லாத நேரு பண்டிதர்தான். எந்தவிதத்திலும், காமன்வெல்த கூட்டணியிலே இந்தியா இருப்பதினல் இலாபமில்லை என்ப...

...மாத்திரமில்லை; மனித தர்மத்திற்கு இழைக்கும் அநீதிக்கு நாம ஒத்து ஊதுபவர்களுமாகிரேரும்.

ஒரு சிலருக்கு அகில உலக விளமபரம் கிடைக்கிறது என்பதற்காக, சென்ற யுத்தத்திற்குப் பிறகு வேகமாக வந்து கொண்டிருந்த உலக மாறுதல்களைத் தடை செய்யலாகாது.

இந்திய உபகண்டத்தில் வெள்ளையன் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டால் மாததிரம் போதாது; உலகத்தில் கடைசி மனிதன் சுதந்திரம் பெறும்வரை போராட வேண்டியதே நம் கடமை.

இதற்கு நேரு பண்டிதர் செல்லும வழி சரியா? அவர், இன்னும் ஒரு வாரத்திலே லண்டனுக்குப் ...

தென் ஆப்பிரிக்காவிலே கறுப்பர்களை அடித்துத் துரத்திக் கொண்டிருக்கும் ஸ்டீரிடம் கூட விருந்து ஏவைக்கப் போகிருர்! கருப்பனை உள்ளேவிட மறுக்கும் மென்ஜீஸ்கூட உலவப் போகிருர்!

அவரவர் நாட்டிற்குள் நடக்கும் விஷயங்களைப் பற்றி மற்றவர் பேசக்கூடாது என்று, முற்பே கட்டுப்பாடாகச் சட்டம் வைத்திருக்கிருர்கள். இந்த நிலையிலே பேசவேண்டிய விஷயம் என்ன இருக்க முடியும்? ரஷ்யாவின் புதிய தலைமைப் பீடத்தைப் பற்றிய ஆராய்ச்சியும், ஆங்கிலோ—அமெரிக்க கூட்டணி வளர காமன்வெல்த் செய்யக்கூடிய உதவியும்தான்! ...

எதிர்க் கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகளுக்கும், ஆளும் உரிமைப் பெற்றிருக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் உள்ள உறவுமுறை வேறு விதமானது—அது விசித்திரமானது—எப்படி இந்த எதிர்ப்பு நீடிக்கிறது என்று பலரும் ஐயுறத் தக்கது!

தமிழ் நாட்டில் பலம் வாய்ந்தக் கட்சி தி. மு. கழகம்தான் என்று மாற்ருரில் நல்லோர் ஒப்புக் கொண்டுவிட்டார்கள். 'உண்மையை ஒப்புக்கொண்டால், பலவீனம்' என்ற உலுத்துப்போன தத்துவத்தின் அடிப்படையில், நம்மை சக்தி மிக்கவர்கள் என்று காங்கிரஸ் கட்சிக்காரர்கள் முன்பெல்லாம் ஒப்புக்கொண்டதில்லை நம்மை அலட்சியப்படுத்துவதாக நாடகமாடிவிட்டு, நினைவிலும் கனவிலும் நம்மைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். அன்றைய அகத்தின் 'அழகு' இன்றைய காங்கிரஸ் கனவான்களின் முகங்களில் வரையப்பட்டிருக்கிறது!

ஆளும் கட்சிக்காரர்கள் எதிர்க் கட்சிகளைத் தாக்கிப் பேசும் பொழுது, கொள்கை முரண்பாடுகளைததான் குறிப்பிடுவார்கள்; அதுதான் அரசியல் நாகரீகம்! இங்கே, தி. மு. கழகத்திற்கும்—காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலே உள்ள கருத்து வேறுபாடு அப்படி அல்லவே! நமது கொள்கை தவறு என்று சொல்வதற்கு அவர்களில் எவருக்கும் இப்போது தைரியமில்லை. எந்தக் கோணத்திலிருந்தும, தி. மு. கழகத்தின் கொள்கையைக் கண்டித்துப் பேச அவர்களால் முடியவில்லை என்கிற நிலை வந்த பிறகுதான் 'தெனனுடு' பிரிந்தால் ஒற்றுமை குலைந்து போகும் என்று குழைந்து பேசத் தொடங்கினர்கள். நமது கொள்கையை அவர்கள் ஒப்புக்கொள்கிருர்கள்; வரலாற்று ஆதாரத்தை ஏற்றுக்கொள்கிருர்கள்; ஆனல், கெஞ்சுகிருர்கள் — 'நாடு சீர்குலையும்'—என்று! இதுபோன்ற உண்மையான—மறுக்க முடியாத கொள்கையை எதிர்க கட்சி வலியுறுத்துமேயானல், மற்ற நாடுகளில் அந்தக் கொள்கையுடையோர் அதிகாரம் பெற்றிருப்பார்கள். இங்கே அந்த நிலை — அந்த மனவளம-உருவாகவில்லை. எதிர்க் கட்சிக்காரர்களின் கொள்கைகளைக் கைவிடச் செய்ய கண்ணீர் வடிக்கிருர்கள் — ஒற்றுமை குலைந்து விடுமாம்!

ஒற்றுமை குலைவது எப்போது? நியாயமான உரிமையைக் கேட்கும் போது அது மறுக்கப்பட்டால் தான் பகை முற்றும்—வளரும்—வெடிக்கும்—விபரீதம் விளையும்!

நமது பிரிவினைக் கோரிக்கை மறுக்கப்படுவதினல், நமக்கும் டில்லிக்கும் உள்ள கசப்பு, திராவிட நாடு தனி நாடான பிறகு இருக்கவே இருக்காது. இது பலருக்குப் புரியாது. ஆழ்ந்து சிந்திக்காமல் 'நாட்டைத துண்டாடுவதா?' என்று கண்ணை மூடிக்கொண்டு பேசும்போது, ஒற்றுமை குலையும் என்ற தவருன ஈவுதான் கிடைக்கும. ஒற்றுமை குலைவதற்குக் காரணம் என்ன? தனிநாடு பிரிந்த பிறகு ஒற்றுமையைக் குலைப்பார்கள், தி. மு. கழகத்தார்,—என்ருல் தனி நாடு கோரிக்கையை என் கண்ணியம் தவருமல், நாகரீகத்தின் அடிப்படையில் கேட்கிருர்கள்?'—இதை ஏன் காங்கிரசிலே இருக்கும் படித்தவர்கள்கூட புரிந்து கொள்வதில்லை என்று நமக்குப் புரியாமலில்லை; புரிகிறது. காங்கிரசின் ஜீவ இலட்சியத்தை அவர்கள் காபபாற்றுவதாக எண்ணிக்கொள்கிருர்கள். எதிர்க்கட்சியின் வேண்டுகோள்களை காந்தியார் அக்எறிந்துவிடச் சொன்னதாக அவர்களுக்கு நினைவு படித்த காங்கிரஸ்காரர்களாவது சிந்தித்துப் பார்க்கவேண்டும்— ஒரு நாட்டின் ஒற்றுமை, எதிர்க்கட்சி அவமதிக்கப்படும்போது குலைகிறதா—அவர்களின் உரிமை மதிக்கப்படும் போது குலைகிறதா?'—என்று!

இந்தியத் துணைக் கண்டத்திற்கு தென்னுட்டின் ஒத்துழைப்பு, தென்னுடு தனி நாடான பிறகு தான் கிடைக்கும். திராவிட நாடு பிரிந்த பிறகு நடைபெற இருக்கும் நேருவின் வரவேற்புக்கும், இப்போது நடைபெற்றுவரும் நேருவின் வரவேற்புக்கும் உள்ள வேறுபாடு, பிறகுதான் தெரியும் காங்கிரஸ்காரர்களுக்கு!

வெள்ளைக்காரர்களுக்கும் —காங்கிரஸ்காரர்களுக்கும் இப்போதைய உறவு அதிகமா, முன்பு அதிகமா— என்பதை, ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால், தென்னுட்டின் எதிர்காலத்தைப் பற்றி ஓரளவு காங்கிரஸ்காரர்களால் புரிந்துகொள்ள முடியும். அவமானச் சின்னமாக இருந்த மவுண்ட்பேட்டன், இப்போது அலகாபாத் நேருவுக்கு அத்தியந்த நண்பர் என்பதை யாராலும் மறுக்க முடியாதே!

எனவே, காங்கிரஸ்காரர்கள் தி. மு. கழகத்தின் உயிர்கொள்கையை கைவிடச் செய்ய கெஞ்சிக்கூத்தாடுவதை விடுத்து, அந்த எதிர்க்கட்சியின் கொள்கையை மதித்து மேற்கொண்டு காரியமாற்ற முனைய வேண்டும். காலத்தால் மறைந்துவிடக்கூடிய சாதாரணப் பிரச்சினையல்ல, இது! பிரச்சினையை வலியுறுததும் நோக்கத்துடன்தான், கட்சிக்கே, 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது என்பதை தேசியத் தோழர்கள் மறந்துவிடக்கூடாது. அதனலேதான், இன்றைக்கும், சதிகளையும் தூளாக்கிவிட்டு, ஒரு எதிர்க் கட்சியாக இயங்க முடிகிறது தி. மு. கழகத்தால்!

நமதுஏடு-பெரிய அளவில்?

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டிய பாதுகாப்பிலோ மிக மிகக் கவனக் குறைவு!

நமது 'நம் நாடு' தினு இதழுக்கு விளம்பரப் பண பலமில்லை; ஏன், அரசியலார்கூட இத்துறையில் ஓரவஞ்சனையாக நடக்கிருர்கள் என்றே நாம் கருதவேண்டிய நிலைக்குத்தான் அவர்கள் போக்கு இருந்து வருகிறது; இந்நிலையில், பத்திரிகையின் விற்பனையை மட்டுமே பெருந்துணையாகக்கொண்டு நமது ஏடு இயங்கவேண்டியிருக்கிறது. எனவே, கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும இவ்வகையில் பெரிதும் கவலை செலுத்தினுலன்றி, 'நம் நாடு' பெரிய அளவில் வெளிவரவேண்டுமென்ற நாம் இனி மனதாலும் நினைக்க இயலாது.

எனவே, ஒவ்வொரு கிளைக் கழகமும, 'நம் நாடு' சந்தாதாரராக முதலில் பதிவாக்கப்பட வேண்டும் என்பதே எனது பணிவன்பான — வற்புறுத்தலான வேண்டுகோளாகும். பின்னர், ஒவ்வொரு கிளையும் இயன்ற அளவு மற்றவர்களைச் சந்தாதாரராகச் சேர்த்துதவ உறுதிகொள்ள வேண்டும்; அதேபோன்று, செயலிலும் நிறைவேற்றுதல் வேண்டும்.

'நம் நாடு'—தனது பயணத்தில் நான்காம் ஆண்டைத் துவக்கும் இந்த நாளிலிருந்து மூன்று திங்களுக்குள் இரண்டாயிரம் புதிய (ஆண்டு) சந்தாதாரர்களையும், பொதுவாக இப்போதுள்ளதைவிட வாசகர்களின் எண்ணிக்கையை மூன்றில் ஒரு பங்கு அதிகரிக்கவும் செய்தால்— மூன்று திங்களில் இப்பணியைக் கிளைக் கழக நிர்வாகிகள் இனிது நிறைவேற்றித் தருவார்களானல் — அன்று அவர்களிடத்திலும், பொதுச் செயலாளரிடத்திலும் எவ்வகையிலும் அனுமதி பெற்று 'நம் நாடு' அளவில் பெரிதாகவும், மற்ற அம்சங்களிலும் சிறப்புப்பெற்று வெளிவரச் செய்யலாம்.

எனவே, கிளைக் கழகங்களைக் கட்டிக் காத்துத் தீவிரப் பணியாற்றிவரும் நிர்வாகிகள், இதற்கான முயற்சியிலும் உடனடியாக ஈடுபட்டு, செயல் முறையில் வெற்றியுறச் செய்ய வேண்டுமென்று பெரிதும் வேண்டிக்கொள்கிறேன்.

'கழகம் தேர்தலில் ஈடுபட வேண்டும்' என்ற முடிவினை, மாநில மாநாட்டின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்தில், நமது ஏடு, மேலும் வலிவும் பொலிவும்பெற்று நாடெங்கும் பவனிவருதல் வேண்டும் அல்லவா? எனவே, அருமைத் தோழர்களே! இன்றிலிருந்து மூன்று திங்களுக்குள்-செப்டம்பர் 17-ந்தேதிக்குள் குறைந்தது இரண்டாயிரம புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் பணியினை நிறைவேற்றுவோமானல், செப்டம்பர் 17 நமது கழகம் கண்ட மகத்தான நாள்—அன்று நமது ஏடும் புதிய அம்சங்களுடன் வெளிவருவதற்கான பணியினையும் துவக்கலாம். நான்காம் ஆண்டுத் துவக்க விழாவில் யான் கொள்ளும் ஆசையும் இதுவேயாகும்.

வாழ்க 'நம் நாடு!'

என். வி. நடராசன்
துணைப் பொதுச்செயலாளர்

பாதை அமைப்பவர்கள்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணவக்காரனும் அவன் கூறும் கொள்கையின் நிழலில்தான் தன்னுடைய சோமாதிக்கு ஆறடி நிலம் சம்பாதித்துக்கொள்ள முடியும் என்பது அவனுக்கு உறுதியாகத் தெரியும்!

கார்க்கியின் சிறப்பியல்புகள் பற்றி ஆராயும் நோக்கத்துடன் இதை எழுதவில்லை; இவ்வளவு சிறப்பு வாய்ந்தவன், 'மூக்கைச் சிந்துவதிலும் அறிவாளிகள் விழிப்புடன் நடந்துகொள்வார்கள்' என்று சொல்லியிருப்பதை சற்று அதிகமாக வலியுறுத்த வேண்டாமா?

ஆழ்ந்து சிந்தித்தால், நமக்கு எதிரே இதழ் விரித்திருக்கும் சரித்திரச் சம்பவங்களை கோர்வைப் படுத்தினால், கார்க்கியின் கூற்று, வெறும் நகைச்சுவை கொண்டதல்லவென்பதும் விளங்குகிறது.

'ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், இடது கன்னத்தையும் காட்டு' என்று சொன்ன ஏசுகிறிஸ்துதான், கோயில்களில் கூடாரமடித்திருந்த விபசாரிகளை, சாட்டையால் இரத்தம் கசிய அடித்ததாக விவிலியநூல் விளம்புகிறது.

யாகசாலையிலிருந்து ஆட்டுக்குட்டியை மீட்க கருணைக் கடல் புத்தன், பலாத்காரத்தைத் துணை கொண்டே ஆட்டினை மீட்டான்

'இந்தியாவின் தூசி மண்கூடப் புனிதமானது' என்று மேல் நாடுகளில் பிரச்சாரம் செய்த விவேகானந்தர்தான், 'நான் இந்தியாவில் மனிதர்களை உற்பத்திச் செய்ய வேண்டும்; ஏனென்றால், தற்போது என் நாட்டில் பெண்களும், பேடிகளுமே இருக்கிறார்கள்,' என்று கோபாவேசமாகப் பேசினார்.

ஆழ்ந்த சிந்தனையைக் காட்டும் பெரியோன் — அடிமை விலங்கறுத்த மகான் என்று உலகம் போற்றும் ஆபிரகாம் லிங்கன், 1,861 மார்ச் 4-ந் தேதி ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதும், காங்கிரசிற்கு விடுத்த முதல் உரையில் பேசிய பேச்சுக்கள்……அப்பப்பா! லிங்கனா, இவ்வளவு 'உக்கிரமாக'—கோபாக்கினி கிளம்பப் பேசக் கூடியவர் என்று உலகமே வியந்தது!

கார்ல்மார்க்ஸ், மனித குலத்தின் மீது பேரன்பு வைத்தவன்தான்; அவனே பேசினான், தன் தாய் நாட்டாரைப் பற்றி — ஜெர்மானியரைப் பற்றி—'நாய்கள்; அசலுக்கும் நகலுக்கும் வித்தியாசம் தெரியாத பன்றிக் குட்டிகள்'—என்று!

அவரவர்களுக்கு இயல்பான குணங்களை விடுத்து சில பல சமயங்களில் குமுறும் எரிமலையாகக் காட்சியளித்த சான்றோர்கள் அனுவசியமாக மூக்கைச் சிந்தவில்லை…

அவர்கள் மூக்கை சிந்தியபோது எத்தகைய நிலையில்—அளவில் அவர்கள் கண்களில் கனல் பறக்கும்—முகத்தில் கடுமை கொப்பளிக்கும்—வார்த்தையில் வேதனை அனுபவித்ததால் உண்டான துயர ஒலிகேட்கும் என்பதை, நேருக்கு நேராக—கண் கூடாகக்காணும் பெறற்கரிய வாய்ப்பு, கடந்த மே திங்கள் 20-ம் நாள் இரவு 7-30 மணிக்கு இந்தத் திராவிடத்தின் ஆயிரக் கணக்கான மக்களுக்குக் கிடைத்தது.

தி மு. கழக 2-வது மாநில மாநாட்டின் இறுதி நாளில், குமரி முனைத் தோழனையும் கொங்கணத்துப் பிரதிநிதியையும் ஒருசேர எதிர் அமர்த்திக்கொண்டு, அடக்கத்திற்கு பேர்பெற்ற—அமைதிக்கு இலக்கணம் வகுத்துத்தரும் ஆய்ந்தவிந்தடங்கிய சான்றோன் முறைகளை ஏவி, 'அழித்து ஒழித்து விடலாம்' என்று கனவு காண்கின்ற ஒரு சர்க்காரை—நம்முடைய புத்தகங்களைப் பறிமுதல் செய்கிற ஒரு சர்க்காரை—நம்முடைய பத்திரிகைகளுக்கு 'ஜாமீன்' கேட்கிற ஒரு சர்க்காரை-நம்முடைய தோழர்களை சிறைச்சாலையில் தள்ளுகிற ஒரு சர்க்காரை—நம்முடைய கூட்டங்களுக்கு 144 போடுகின்ற ஒரு சர்க்காரை—நம்மை மாற்றாந்தரத்தில் காட்டிக் கொடுக்கிற ஒரு சர்க்காரை எத்தனை நாளைக்கு விட்டுவைப்பது? எத்தனைநாளைக்கு அவர்களை அங்கே வீற்றிருக்க அனுமதிப்பது? 'அவர்கள் அங்கே இருக்கட்டும்; நாம் வெளியே இருந்துகொண்டு திராவிட நாட்டிற்குப் பணியாற்றிக் கொண்டிருப்போம்' என்று எப்படி எடுத்துச் சொல்லிக்கொண்டிருப்பது?"

எரிமலை குமுறுகிறதா?

அறிஞர் அண்ணா, கண்களில் தீப் பறக்கக் கேட்டார் :—

"நமது நாட்டை நமக்காக்க வேண்டுமென்பதற்காகப் பணியாற்றுகிற நேரத்தில் தடைகளை விதிக்கிற ஒரு சர்க்காரை—நம்முடைய பண்பாடுகளை அழிக்கிற ஒரு சர்க்காரை—நம்மைத் தாறுமாறாகப் பேசி, அடக்கு

ஆம்; பழிதீர்த்துக் கொள்வதென்பது மனிதனுக்குள்ள உரிமை; இந்த உரிமையைக் கொடுப்பவர்கள் மனிதர்கள்தான்!

இனிப் பொறுக்க முடியாது என்ற நிலையில்—வேதனை வளர்ந்து விட்ட நேரத்தில் பழிதீர்த்துக் கொள்வதென்பது 'பாவம்' அல்ல! எதிராளி மட்டும் ஏன் மனிதனின் சமாதான ஆர்வம் செத்து மடியும் அளவுக்குச் செயல்புரிகிறான்? தான் புறக்கணிகிறவன் பாவத்தைப் பற்றி நினைக்காதபோது, நாம் மட்டும் ஏன் புண்ணியத்தைக் கட்டி அழ வேண்டும்?

'இப்படியெல்லாம் செய்யாதே!'—முதன் முதலில் தற்காப்புக் குரல் கொடுத்தோம்.

'இப்படிச் செய்வது நியாயம் தானா?'—மனிதத் தன்மையில் நமக்கிருக்கும் நம்பிக்கையை அடிப்படையாக வைத்து இப்படிக் கேட்டோம்.

இரண்டுக்கும் பதில் இல்லை மாறாக, தலைகிறுக்குத்தனம் விஷவேகத்தில் வளர்வதையே காண்கிறோம்.

இனி அவர்களிடம் நமக்கு வேலையில்லை யாருடனும் சமரசம் பேசவும் நாம் தயாராயில்லை துன்பத்தைக்கண்டு சீறி விழுந்த சான்றோர்கள் பாணியில் நாமும் ஒரு முறை வகுத்துக் கொள்வோம்; அந்த முறையின் வழி நடப்போம்.

"எங்கே செல்கின்றீர்; என்ன தேடுகின்றீர்; ஏன் இதனைச் செய்கின்றீர்; கடைசியில் எதைக் கட்டிமுடிப்பதாக உத்தேசம் உமக்கு?"

கடந்த ஒரு மாத காலமாக எதிர்ப்படும் யாரும்—அவர்களில் நல்லவர்களும் உண்டு—நச்சுமனப் பான்மையினரும் உண்டு—நம்மை நோக்கிக் கேட்டவண்ணமாக உள்ளனர்.

அவர்களுக்கு நாம் சொல்ல நினைப்பதெல்லாம் 'எங்கே போகிறோமோ யாம் அறியோம்; எவ்வளவு தூரம் போகவேண்டும் என்பதும் தெரியாது; ஆனால், எங்கள் வழியேதான் நடக்கிறோம் என்பதில் மட்டும் தெளிவாக இருக்கிறோம் ஆற்றல் மிகப்படைத்த மேற்பார்வையாளர்களின் கீழ் தான் அணிவகுத்து நடக்கிறோம்……"

"நாங்கள் எடுத்துக் கொள்ளும் நியாயமான முயற்சி அத்தனைக்கும் தடைக்கல்லாக இருக்க யாரையும் அனுமதிப்பதாக நோக்கமில்லை இப்படிச் சொல்வதால் யாரையும் பயமுறுத்துகிறோம் என்பதல்ல—எச்சரிக்கிறோம்."

இந்த நேரத்தில், எதிரிகளை நாம் எச்சரிக்கும்போது வேறொரு சரித்திரச் சம்பவம் நினைவுக்கு வருகிறது.

அமெரிக்கப் புரட்சிக்கு மேகம் கருத்துவந்த நாட்களில் — 'இங்கிலாந்து உங்கள்மீது அன்பு செலுத்தி அனுதாபத்துடன் நடத்தவேண்டுமானல், முதலில் நீங்கள் இங்கிலாந்துக்கு அடிபணிந்து விசுவாசம் காட்டவேண்டும்'—புரட்சிக் கனவில் மூழ்கிக் கிடந்த அமெரிக்கரை நோக்கி, நார்த் பிரபு எச்சரித்தான்!

'பூ; நீ என்ன எச்சரிப்பது? இதோ என் எச்சரிக்கையைக் கேள்'—என்று, அமெரிக்க நாட்டின் புகழ் வாய்ந்த பேச்சாளன் பாட்ரிக் ஹென்றி வெர்ஜீனிய சட்டசபையில் முழக்கினான் :—

"ரோமானிய தலைகிறுக்கன் ஜூலியஸ் சீசரை மட்டந் தட்ட ஒரு புரூட்டஸ் உடன் பிறந்தே வளர்ந்தான்; இங்கிலாந்துக் கொடுங்கோலன் சார்லஸ் உயிர் குடிக்க ஒரு கிராம்வெல் முளைத்தெழுந்தான்—இந்த இரு எடுத்துக் காட்டுகளைக் கண்டாவது, இங்கிலாந்து மன்னன், மூன்றாம் ஜார்ஜ் பிழைத்துப் போகட்டும் என்று நான் எச்சரிக்கிறேன்"

அங்கே—நார்த் பிரபு! இங்கே—காமராசர்—நேரு!

அங்கே—ஹென்றி, வெர்ஜீனியச் சட்டசபையில்! இங்கே—அறிஞர் அண்ணா, திருச்சி பெருவர் நகரில்!

எச்சரிக்கைக்குப் பின்னால் ஏற்படும் செயல் முறை வேறாக இருக்கலாம். முடிவு?

'உங்கள் எச்சரிக்கை எங்களை என்ன செய்யும்? எங்களால் தான் மக்களுக்கு வழிகாட்ட முடியும்……'

இப்படித் திமிர் வாதம் பேசும் காமராசர்கள் பேசித் திரியட்டும். யாருடைய பார்வை நெடுந்தூரம் பார்க்கச் சக்தியற்றுக் கிடக்கிறதோ, அந்தச் சிறிய கண் படைத்தவர்கள் ஆசை தீரப் பேசட்டும்!

நாம் வழிகாட்டிகள் என்று சொல்லிக்கொள்வதைவிட, 'வழி உடைப்பவர்கள்' என்பதிலே பெருமைப்படுவோம்!

இராசபாட்டையில் தளிர்நடை போடுபவனைவிட, காடு மேடுகளைத் திருத்தி பாதைபோடுபவன்தான் நம்பிக்கைக்கு உகந்தவன் — என்று மக்கள் என்றோ முடிவு கட்டிவிட்டார்கள்.

மக்களின் இந்த முடிவை கருக விடாமல் நிறைவேற்றிக் காட்ட மூன்றாண்டுகளை முடித்துக் கொண்டு நான்காம் ஆண்டில் அடி வைக்கும் 'நம் நாடு' தவறாமல் உழைக்கும்!

'நம் நாடே! நீ வாழ்க, வளர்க!'

★

"'நம் நாடு', நான்காம் ஆண்டில் அடிஎடுத்து வைக்கிறது என்ற சேதி கேட்டு, பூரிப்பும் பெருமகிழ்வும் அடைந்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கும் எத்தனையோ 'தனிச்சிறப்பு'க்களில் 'நம்நாடு'ம் ஒன்று

"இந்திய உபகண்டத்திலேயே, ஒரு அரசியல் கட்சியின் நேரடி பொறுப்பில் வெளிவரும் தினஏடு 'நம் நாடு' தான்! மற்ற சில கட்சிகள் முயன்றன—மொட்டாகவே கருகிவிட்டன!

"1953 ஜூன் 15-ல் உதயமான 'நம் நாடு' ஓய்வு எடுத்துக் கொள்ளாமல், ஒளிந்து கொள்ளாமல், குறித்தபடி திராவிடரைச் சந்தித்து வருகிறது. இந்த பெருமைக்கு வாசகர்கள் காரணம் என்பதைவிட, கொள்கையிலுள்ள வாஞ்சை ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு, வயிற்றைக் கட்டி வாயைக்கட்டி, எண்ணமும், வண்ணமும் கூட்டித்தரும் 'நம் நாடு' பணிமனைத் தோழர்களே காரணம் என்பதே சரியானதாகும். அவர்களுக்கு இந்த நல்ல நாளில் எனது மனமுவந்த வாழ்த்துதல்களை உரிமையாக்குகிறேன். 'நம் நாடு' மேலும் வலிவும், பொலிவும் பெறவேண்டுமென்ற ஆசையும், ஆர்வமும் நமது பொதுச்செயலாளருக்கு நிரம்ப உண்டு. அதற்கு வேண்டிய ஆற்றலைப் பெருக்கிக் காட்ட வேண்டியது நமது கடமை."

"நம் நாடே! நீ வாழ்க, வளர்க!' என வாழ்த்துகின்றேன்!"

அன்பன்,

கே. ஏ. மதியழகன்

ஆற்றல்மிக்க எழுச்சிப் படையாம் மாணவர் பாசறையின் அமைப்பாளர்! நல்ல உழைப்பாளர்! தோழர் டி. கே. பொன்னுவேலு அவர்கள்.

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்

[மயிலை-சீனி. வேங்கடசாமி எழுதியது]

தமிழ்க் கலைஞர்கள் கோவில், சிற்பம் முதலிய கலைகளை நிர்மாணிப்பதிலும் ஓவியம், இசை, நாடகம் முதலிய துறைகளில் பண்டை நாள் முதல் நுண்ணிய கலைத் திறன்களையும் மிக அழகாக ஆராய்ந்து இலக்கியச் சான்றுகளுடன் விளக்கியுள்ளார்.

சித்தன்ன வாசலில் நேரில் சென்று தீட்டிய வண்ண ஓவியமும் வேறுபல படங்களும் கொண்ட அழகிய பதிப்பு.

விலை ரூபாய் 3—8—0

பாரி நிலையம்,

59, பிராட்வே, சென்னை-1

'பாரதியார் கவிதைகள்'

[அழகிய இரண்டாம் பதிப்பு]

சாதா பதிப்பு	ரூ. 5—0—0
காலிகோ	ரூ. 5—8—0

விபரங்களுக்கு :

முத்து நூலகம், 8-ஜி பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5

முரசொலி பதிப்பகம், 131, பிராட்வே, சென்னை-1.

தி. மு. க.-வின் தனி ஆங்கில ஏடு—
'தமிழ்நாடு டைம்ஸ்' வளர்ச்சி நிதிக்காக:

17—6—56 மாலை 6-30 மணிக்கு
திருவல்லிக்கேணி கலா மண்டபத்தில்

தோழர் **மு. கருணாநிதி** தலைமையில்

இயல்-இசை-நாடக மன்றத்தார் அளிக்கும் **'தந்தி'** நாடகம் நடைபெறும்

(திரைப்படமாக்கப்பட்டுவரும் எழிலோவியம்)

டிக்கட் விவரம் : ரூ. 10, 5, 3 அணா 8

இப்பொழுது விற்பனையாகிறது

ஆசிய ஜோதி அளித்திடும் நீதி!

தமிழர்களுக்கு நேரு அளித்த அநியாயத் தீர்ப்பைக் குறித்து அண்ணா, இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோரின் சொல்லோவியங்கள் நூல் வடிவில்!

84 பக்கங்கள் : விலை 12 அணா

விற்பனை உரிமை :

பாரி நிலையம்,

பிராட்வே, சென்னை-1

வியாபாரிகளுக்குத் தக்க கழிவு தரப்படும்

SSS BROTHERS PHONE 55116

RUBBER STAMPS
HALF-TONE AND
LINE BLOCK MAKERS

153. BROADWAY (UPSTAIRS) MADRAS

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ